# தினபூமி


thinaboomi.com

பூமி: 30 சுற்று: 188 ஆனி 01

Regd. No.CBE/090/2011-2013

கோவை, ஞாயிறு, ஜூன் 15, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**மேலும் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தினால் தெஹ்ரான் எரியும்: ஈரானுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை**

...2-ம் பக்கம்


**ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்: இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க தூதரகம் அறிவுரை**

...3-ம் பக்கம்

**27 ஆண்டுகளுக்கு பிறகு ஐ.சி.சி. சாம்பியன் பட்டம் வென்ற தென் ஆப்பிரிக்கா**

...6-ம் பக்கம்





● மகாபலிபுரத்தில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி மகன் அப்சர்-ரீஷ்மான் அப்ரா ஆகியோரது திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடைகளை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பாராளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, தமிழச்சி தங்கபாண்டியன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத்தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் பெ.சண்முகம், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## * கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிய வேண்டாம்:
## * வீடு வழங்கும் திட்டம், மீன்வளத் திட்டம் உள்ளிட்ட

# பிரதமரின் திட்டங்களுக்கு அதிகம் படியளப்பது மாநில அரசுதான்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்

சென்னை, ஜூன் 15-

**வீடு வழங்கும் திட்டம், மீன்வளத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களில் பிரதமர் முகத்தைத் தாங்கி செயல்படும் திட்டத்துக்கு அதிகம் படியளப்பது மாநில அரசுதான் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மேலும், கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறியும் பழக்கத்தை மத்திய பா.ஜ.க. அரசு மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

**பிரதமரின் திட்டங்கள்**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது., பிரதமர் வீடு வழங்கும் திட்டம், பிரதமர் மீன்வளத் திட்டம், உயிர்நீர் எனப் பிரதமரின் பெயரையும் ஸ்டிக்கரில் பிரதமரின் முகத்தையும் தாங்கிச் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம் அவர்களைக் காட்டிலும் அதிகமாகப் படியளப்பது மாநில அரசுதான்.

> **“படையப்பா படக் 'காமெடி' போல "மாப்பிள்ளை அவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது எனச் சேலம் அரசுவிழாவில் பேசியிருந்தேன். பேசினேன் என்பதைவிட பேசவேண்டிய நிலைக்கு உள்துறை அமைச்சரின் அடிப்படையற்ற குற்றச்சாட்டால் தள்ளப்பட்டேன் என்றுதான் கூறவேண்டும்.”**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**நான் தள்ளப்பட்டேன்...**

படையப்பா படக் 'காமெடி' போல "மாப்பிள்ளை அவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது எனச் சேலம் அரசுவிழாவில் பேசியிருந்தேன். பேசினேன் என்பதைவிட பேசவேண்டிய நிலைக்கு உள்துறை அமைச்சரின் அடிப்படையற்ற குற்றச்சாட்டால் தள்ளப்பட்டேன் என்றுதான் கூறவேண்டும். அது நாளிதழில் செய்தியாகி, தரவுகளோடு விவரிக்கப்பட்டுள்ளது. இனியாவது, கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறியும் பழக்கத்தை மத்திய பா.ஜ.க. அரசு மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இளநிலை நீட் தேர்வு முடிவு வெளியீடு:

# தமிழ்நாட்டில் 76,181 மாணவர்கள் தேர்ச்சி

## தமிழக அளவில் நெல்லை மாணவர் முதலிடம்

சென்னை, ஜூன் 15-

**இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு முடிவுகள் தேசிய தேர்வுகள் முகமையால் நேற்று வெளியிடப்பட்டது. இத்தேர்வில் ராஜஸ்தானை சேர்ந்த மகேஷ் குமார் முதலிடத்தைப் பிடித்துள்ளார். தமிழகத்தில் 76,181 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். முதல் 100 இடங்களில் தமிழகத்தைச் சேர்ந்த 6 பேர் இடம் பிடித்துள்ளனர். நெல்லையை சேர்ந்த மாணவர் எஸ்.சூர்ய நாராயணன் 99.9987779 சதவீதம் பெற்று மதிப்பெண் தரவரிசையில் 27-வது இடம் பிடித்துள்ளார். மேலும் தமிழகம் அளவில் முதலிடம் பிடித்துள்ளார்.**

தேர்வெழுதிய விண்ணப்பதாரர்கள் தங்கள் நீட் தேர்வு முடிவுகளை அதிகாரபூர்வ வலைத்தளமான neet.nta.nic.in மூலம் தெரிந்துகொள்ளலாம். இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வில் ராஜஸ்தானை சேர்ந்த மகேஷ் குமார் முதலிடத்தைப் பிடித்துள்ளார். மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த உத்கர்ஷ் அவாதியா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்த ஆண்டு மொத்தம் 2276069 பேர் நீட் தேர்வுக்கு பதிவு செய்தனர், அதில் 2209318 பேர் தேர்வு எழுதினர். இதில் மொத்தம் 1236531 பேர் மருத்துவ நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் 514063 பேர் ஆண்கள், 722462 பேர் பெண்கள் மற்றும் 6 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள் ஆவர்.

ஆண்களில் ராஜஸ்தானைச் சேர்ந்த மகேஷ் குமார் இந்த ஆண்டுக்கான நீட் தேர்வில் முதலிடம் பெற்றுள்ளார், அவர் 99.9999547 சதவீத மதிப்பெண்களைப் பெற்றுள்ளார். பெண்களில் டெல்லியைச் சேர்ந்த அவிகா அகர்வால் முதலிடம் பிடித்துள்ளார். அவர் இந்திய அளவில் 99.9996832 சதவீத மதிப்பெண்களைப் பெற்று 5ம் இடம் பிடித்துள்ளார்.



எஸ்.சூர்ய நாராயணன்

**முதல் 10 இடம் பிடித்தவர்கள்**

| ரேங்க் | பெயர் | சதவீதம் |
|---|---|---|
| ரேங்க் 1: | மகேஷ் குமார் | - 99.9999547 % |
| ரேங்க் 2: | உட்கர்ஷ் அவதியா | - 99.9999095 % |
| ரேங்க் 3: | கிரிஷாங் ஜோஷி | - 99.9998189 % |
| ரேங்க் 4: | மிருணாள் கிஷோர்ஜா | - 99.9998189 % |
| ரேங்க் 5: | அவிகா அகர்வால் | - 99.9996832 % |
| ரேங்க் 6: | ஜெனில் வினோத்பாய்பயானி | - 99.9996832 % |
| ரேங்க் 7: | கேசவ் மிட்டல் | - 99.9996832 % |
| ரேங்க் 8: | ஜா பவ்யா சிராக் | - 99.9996379 % |
| ரேங்க் 9: | ஹர்ஷ் கெடாவத் | - 99.9995474 % |
| ரேங்க் 10: | ஆரவ் அகர்வால் | - 99.9995474 % |

இந்த ஆண்டு இளநிலை நீட் தேர்வு எழுதிய 22.09 லட்சம் பேரில் 12.36 லட்சத்திற்கும் அதிகமானோர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு 13.15 லட்சம் ஆக இருந்த நிலையில், இந்த ஆண்டு குறைந்துள்ளது. அதே நேரத்தில் கடந்த ஆண்டில் தேர்வு எழுதியோர் எண்ணிக்கை 23.33 லட்சத்திற்கும் அதிகமாக இருந்தது.

நீட் தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. அதன்படி 2025-26-ம் கல்வி ஆண்டில் இளநிலை மருத்துவப் படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு மே 4-ம் தேதி நடைபெற்றது. இதனையடுத்து இளநிலை நீட் தேர்வு முடிவுகள் இன்று வெளியாகியுள்ளது. இதன் முடிவுகளை neet.nta.nic.in, exams.nta.ac.in ஆகிய தளங்களில் அறிந்துகொள்ளலாம். அதேபோல அனைத்து விண்ணப்பதாரர்களும் மதிப்பெண் தகவல்களை தங்களின் மின்னஞ்சல் மூலமாக தெரிந்துகொள்ளலாம் என தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது.

மேலும், மதிப்பெண்கள் தொகுக்கப்பட்டதன் அடிப்படையில் நீட் யுஜி 2025-க்கான இறுதி விடைக்குறிப்பையும் தேர்வெழுதியவர்கள் சரி பார்க்கலாம். இந்த தேர்வில் தகுதி பெற்றவர்கள் இந்தியா முழுவதும் எம்பிபிஎஸ், பிடிஎஸ், ஆயுஸ் மற்றும் பிற இளங்கலை மருத்துவப் படிப்புகளுக்கான கவுன்சிலிங்கில் பங்கேற்கலாம்.

இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான கவுன்சிலிங்கில் பங்கேற்பதற்கு

**(கடைசி பக்கம் பார்க்க)**

## அகமதாபாத் விமான விபத்து குறித்து

# உயர்மட்ட விசாரணை குழு அமைத்தது மத்திய அரசு

புதுடெல்லி, ஜூன் 15-

**அகமதாபாத் விமான விபத்து குறித்த விசாரணைக்காக உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்துறைச் செயலாளர் தலைவராக இருப்பார். இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்க மூன்று மாத காலம் அவகாசம் வழங்கப்படும் என சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்**

இது குறித்து நேற்று செய்தியாளர்களை சந்தித்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம்மோகன் நாயுடு, “கடந்த இரண்டு நாட்கள் மிகவும் கடினமாக இருந்தன. குறிப்பாக அமைச்சகத்துக்கும், மற்ற அனைவருக்கும் மிகவும் கடினமான சூழல் இருந்தது. அகமதாபாத்தில் நடந்த சம்பவம் முழு நாட்டையும் உலுக்கியுள்ளது. சம்பவத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்ப உறுப்பினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். நான் தனிப்பட்ட முறையில் என் தந்தையையும் ஒரு சாலை விபத்தில் இழந்துவிட்டேன். எனவே ஓரளவுக்கு, குடும்ப உறுப்பினர்கள் உணரும் வலியையும் வேதனையையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

சம்பவம் குறித்து எங்களுக்குத் தெரிந்தவுடன் அது ஓர் அதிர்ச்சியான தருணம், ஆனால், அந்த அவநம்பிக்கையிலும் கூட, என்ன செய்ய வேண்டும், என்ன ஆதரவு தேவை என்பதை மேற்பார்வையிட நான் தனிப்பட்ட முறையில் சம்பவ இடத்துக்கு விரைந்தேன். நாங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்த போது, குஜராத் அரசு ஏற்கெனவே மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தது.

நம்மிடம் உறுதியான பாதுகாப்புத் தரநிலைகள் உள்ளன. வலுவான நெறிமுறைகள் நாட்டில் உள்ளன. பாதுகாப்பை மேம்படுத்த நாங்கள் அனைத்தையும் செய்வோம். ஏற்கெனவே நமது பாதுகாப்பு அமைப்பு வலுவானது. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களை குடும்பங்களிடம் ஒப்படைக்க டிஎன்ஏ சோதனை நடந்து வருகிறது. தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள கறுப்புப் பெட்டியை டிகோட் செய்வது விபத்து குறித்த ஆழமான நுண்ணறிவை வழங்கும். கறுப்புப் பெட்டியை டிகோட் செய்வதன் மூலம் விமான விபத்துக்கு சில நிமிடங்களுக்கு முன்பு என்ன நடந்தது என்பது பற்றி அறிய முடியும்.

இந்த விமான விபத்து குறித்த விசாரணைக்காக உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்துறைச் செயலாளர் தலைவராக இருப்பார். இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்க மூன்று மாதம் கால அவகாசம் வழங்கப்படும். அகமதாபாத் விமான விபத்தை அமைச்சகம் மிகுந்த தீவிரத்துடன் எடுத்துக்கொள்கிறது. நிலைமையை ஆய்வு செய்ய விமான விபத்து புலனாய்வுப் பணியக இயக்குநர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தார். விமான விபத்து குறித்த தகவல்கள் புலனாய்வுப் பிரிவால் உடனடியாகத் திரட்டப்பட்டது என்று கூறினார்.

## சப்-கலெக்டர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு

# குரூப்-1, குரூப்-1ஏ முதல்நிலை தேர்வு இன்று நடைபெறுகிறது

சென்னை, ஜூன் 15-

**சப்-கலெக்டர், டி.எஸ்.பி. உள்ளிட்ட பணியிடங்களுக்கு குரூப் 1, 1ஏ முதல்நிலை தேர்வு இன்று 38 மாவட்டங்கள் மற்றும் 6 தாலுகாக்கள் என மொத்தம் 44 இடங்களில் நடைபெற உள்ளது.**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) சார்பில் சப்-கலெக்டர், டி.எஸ்.பி., வணிக வரி உதவி கமிஷனர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் உள்பட குரூப்-1 பணியிடங்களில் 70 காலியிடங்கள் உள்ளன.

காலியாக உள்ள 28 துணை ஆட்சியர்கள், 7 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 19 வணிகவரி உதவி ஆணையர், 7 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை உதவி இயக்குநர், 3 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், 6 தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் என 70 காலிப் பணியிடங்களுக்கும், குரூப் 1 ஏ பிரிவில் 2 உதவி வனப் பாதுகாப்பு அலுவலர் பணியிடங்களுக்கும் முதல் நிலை தேர்வு இன்று நடைபெறுகிறது.

இந்த பதவிகளுக்கு 2 லட்சத்து 27 ஆயிரத்து 982 பேர், குரூப்-1 ஏ பதவிக்கு 6 ஆயிரத்து 465 பேர், குரூப்-1 மற்றும் குரூப்-1ஏ பதவிக்கு 14 ஆயிரத்து 849 பேர் என மொத்தம் 2 லட்சத்து 49 ஆயிரத்து 296 பேர் விண்ணப்பித்துள்ளனர். இந்த நிலையில், குரூப்-1 மற்றும் குரூப்-1ஏ முதல் நிலை போட்டித் தேர்வு இன்று (ஞாயிற்றுகிழமை) நடைபெறுகிறது.

தமிழகத்தின் 38 மாவட்டங்கள் மற்றும் 6 தாலுகாக்கள் என மொத்தம் 44 இடங்களில் குரூப் 1, 1ஏ முதல் நிலை தேர்வு நடைபெற உள்ளது. தேர்வு கண்காணிப்பு பணியில் 987 பேர் ஈடுபடுகிறார்கள். சென்னையில் 170 மையங்களில் தேர்வானது நடைபெறுகிறது.

இதற்கிடையே டி.என்.பி.எஸ்.சி. குரூப் 1 தேர்வு காரணமாக இன்று (ஜூன் 15ம் தேதி) நடைபெறவிருந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி செமஸ்டர் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மாற்றுத் தேதிகள் www.ideunom.ac.in இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும் என்று அறிக்கையின் வாயிலாக சென்னைப் பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

## நீலகிரிக்கு இன்றும் ‘ரெட் அலர்ட்’: மதுரை உள்ளிட்ட

# 12 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை

சென்னை, ஜூன் 15-

**நீலகிரி மாவட்டத்தில் இன்று (ஜூன் 15) ஓரிரு இடங்களில் கன முதல் அதி கனமழையும், கோவை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஈரோடு, சேலம், தருமபுரி, திருப்பூர், திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஒருசில இடங்களில் மழை பெய்துள்ளது. தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன்காரணமாக, இன்று (ஜூன் 15-ம் தேதி) முதல் 18-ம் தேதி வரை, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

இன்று (ஜூன் 15ம் தேதி), நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் அதி கனமழையும், கோவை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஈரோடு, சேலம், தருமபுரி, திருப்பூர், திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

ஜூன் 16ம் தேதி, கோவை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தருமபுரி, ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

ஜூன் 17ம் தேதி, நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

ஜூன் 18ம் தேதி, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

BSE -573.38 பாயின்ட் 81,118.60

NSE -169.60 பாயின்ட் 24,718.60



**தங்கம்** 1 சவரன் ₹74,560 · 1 கிராம் ₹9,320



**வெள்ளி** 1 கிலோ ₹120,000 · 1 கிராம் ₹120.00

**டாலர்** ₹86.25

**பெட்ரோல்** ₹102.63

**டீசல்** ₹94.24

### ஏவுகணை வீசினால் தெஹ்ரான் எரியும்:
# ஈரானுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

**டெல் அவிவ், ஜூன் 15-**

ஏவுகனணகளை வீசினால் தெஹ்ரான் எரியும் என்று ஈரானுக்கு இஸ்ரேல் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தங்கள் நாட்டின் மீது மேலும் ஏவுகணைகளை வீசினால் தெஹ்ரான் எரியும்' என்று ஈரானுக்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து பேசிய இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ், "ஈரானிய சர்வாதிகாரி தனது மக்களை அவர்கள் விரும்பாத ஒரு யதார்த்தத்துக்கு பிணைக் கைதிகளாக வைத்துள்ளார். இஸ்ரேலிய பொதுமக்கள் மீதான குற்றவியல் தாக்குதலுக்கு அவர்கள் பெரும் விலை கொடுப்பார்கள். அயதுல்லா அலி கமேனி இஸ்ரேலை நோக்கி மேலும் ஏவுகணைகளை வீசினால் தெஹ்ரான் எரியும் என்று கூறினார்.

ஈரான் நாட்டிலுள்ள அணுசக்தி மற்றும் ராணுவ உள்கட்டமைப்பு மீது இஸ்ரேல் நடத்திய தொடர் தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக, இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியது. இஸ்ரேல் போர் விமானங்களைப் பயன்படுத்தும் அதேவேளையில், ஈரான் ட்ரோன்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளின் மூலம் தாக்குதலை தீவிரப்படுத்தியது. ஈரான் பதிலடி கொடுத்ததால், வடக்கு இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்ட கோலான் ஹைட்ஸ் முழுவதும் வான்வழித் தாக்குதல் எச்சரிக்கை மணிகள் ஒலித்தன. பொதுமக்கள் பாதுகாக்கப்பட்ட இடங்களுக்கு செல்லுமாறு வலியுறுத்தப்பட்டனர்.



ஈரானின் அணுசக்தி தளங்கள், ராணுவ தளங்கள் மற்றும் அணுசக்தி விஞ்ஞானிகள், ராணுவ தளபதிகளின் இருப்பிடங்களை குறிவைத்து இஸ்ரேல் விமானப்படை நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணி அளவில் திடீர் தாக்குதல் நடத்தியது. 200-க்கும் மேற்பட்ட போர் விமானங்கள், நூற்றுக் கணக்கான ட்ரோன் கள் மூலம் ஈரான் முழுவதும் குண்டுகள் வீசப் பட்டன. ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள அணுசக்தி ஆராய்ச்சி மையம், இஸ்ஃபகான் நகரில் உள்ள அணுசக்தி தொழில்நுட்ப மையம், மர்காஸி மாகாணம் அராக் நகரில் உள்ள கனநீர் அணு உலை மையம் ஆகியவையும் இஸ்ரேலின் தாக்குதலில் தகர்த்து அழிக்கப்பட்டன. இந்த தாக்குதலில், ஈரானின் மூத்த அணுசக்தி விஞ்ஞானிகள் அப்துல் ஹமீது, அகமதுரசா, சையது அமீர் உசைன், மோட்லாபிசாடே, முகமது மெஹதி, அப்பாஸி ஆகிய 6 பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இது, ஈரானின் அணு ஆயுத திட்டத்துக்கு பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது.

இஸ்ரேலின் 2-வது தாக்குதலில் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள ராணுவ குடியிருப்புகள் மீது ட்ரோன்கள் துல்லிய தாக்குதல் நடத்தியதில், ஈரான் ராணுவ தளபதி முகமது பகேரி, இஸ்லாமிக் புரட்சி காவல் படையின் தளபதி உசைன் சலாமி, கதம் அல் அன்பியா என்ற ஈரான் போர் கட்டளை தலைமையகத்தின்தளபதி கோலாம் அலி ரஷீத் ஆகியோர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து பேசிய ஈரானின் தலைவர் அயதுல்லா அலி கமேனி, "இஸ்ரேல் தாங்கள் தாக்கியதால் அது முடிந்துவிட்டது என்று நினைக்கக்கூடாது. அது போல இல்லை. அவர்கள் இதைத் தொடங்கி போரைத் தொடங்கினர். அவர்கள் செய்த இந்தப் பெரிய குற்றத்திலிருந்து அவர்கள் காயமடையாமல் தப்பிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று கூறினார். மேலும், ஈரானிய தாக்குதல்களைத் தடுக்க இஸ்ரேலுக்கு உதவினால், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்சின் தளங்கள் மற்றும் கப்பல்களைத் தாக்குவோம் என்றும் ஈரான் எச்சரித்தது.

# 'காந்தாரா 2' படப்பிடிப்பில் மேலும் ஒரு நடிகர் மரணம்

**பெங்களூரு, ஜூன் 15-**

'காந்தாரா 2' படப்பிடிப்புக்காக வந்த நடிகர் விஜூ வி.கே என்பவர் மாரடைப்பால் உயிரிழந்தார்.

கன்னட நடிகர் ரிஷப் செட்டி இயக்கி நடித்திருந்த திரைப்படம் 'காந்தாரா'. ஹோம்பாளே பிலிம்ஸ் தயாரிப்பில் கடந்த 2022-ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. கர்நாடக மாநிலத்தின் வனப்பகுதியில் வசிக்கும் மக்கள் தெய்வமாக வணங்கும் 'பஞ்சுருளி' என்ற காவல் தெய்வத்தை மையமாக வைத்து உருவான இப்படம் ரூ.400 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்து சாதனை படைத்துள்ளது.

முதல் பாகத்தின் வெற்றியை தொடர்ந்து இரண்டாம் பாகமான 'காந்தாரா சாப்டர் 1' உருவாகி வருகிறது. படத்தின் படப்பிடிப்பு ஷிவமோகா மற்றும் அகும்பே ஆகிய பகுதிகளுக்கு இடையே நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், இதன் படப்பிடிப்புக்காக வந்திருந்த கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்த விஜூ வி.கே. (வயது 43), என்ற நடிகர் விடுதியில் தங்கியிருந்த போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உள்ளது. உடனே அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். இவர் கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கும் மேல் சினிமாவில் பணியாற்றியுள்ளார். சமீபத்தில் வெளியான 'மார்கோ' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, காந்தாரா 2 பாகத்தில் பணியாற்றிய தொழில் நுட்பக் கலைஞரான கபில் என்பவர் கடந்த மாதம் கேரளாவில், சவுபர்னிகா நதியில் மூழ்கி உயிரிழந்தார். அதனை தொடர்ந்து நடிகர் ராகேஷ் புஜாரி திருமண நிகழ்ச்சி ஒன்றில் நடனமாடும் போது மாரடைப்பால் உயிரிழந்தார். தற்போது 3-வது ஆளாக விஜூ வி.கே உயிரிழந்துள்ளார். அடுத்தடுத்து உயிரிழப்புகள் ஏற்படுவதால் படக்குழுவினர் அதிர்ச்சியில் உள்ளனர்.

# காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

**சென்னை ஜூன் 15-**

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 53 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, காசா முனையில் இஸ்ரேல் ஓராண்டுக்குமேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் காசா முனையில் ஆயுதக்குழுவினர் உள்பட 55 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, ஈரான் மீது இஸ்ரேல் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்று தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ஈரான் மீதான இஸ்ரேலின் பொறுப்பற்ற அத்துமீறிய செயல் போரை விரிவடையச்செய்யும் செயல். அதனுடன் காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து குண்டு வீச்சு தாக்குதல் நடத்தி பாலஸ்தீனிய மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இஸ்ரேலின் இந்த வன்முறைப்போக்கு நிச்சயம் கண்டிக்கத்தக்கது. இதற்கு கட்டுப்பாடு, நீதி மற்றும் அர்த்தமுள்ள ராஜதந்திரம் மூலம் முடிவுக்கு கொண்டுவர உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். இனி போர் வேண்டாம்' என தெரிவித்துள்ளார்..

# ஒடிசா: பாதுகாப்புப்படை வீரர் பலி

**புவனேஷ்வர், ஜூன் 15-**

ஒடிசாவில் நக்தலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கையில் கண்ணி வெடியில் சிக்கி பாதுகாப்புப்படை வீரர் பலியானார்.

சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியபிரதேசம் உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் உள்ளது. நக்சலைட்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களாக நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கையை மத்திய அரசு தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், ஜார்க்கண்ட் - ஒடிசா எல்லையில் உள்ள வனப்பகுதியில் நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர், ஒடிசா சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

சுந்தர்கர் மாவட்டம் ரூர்கிலா பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது நக்சலைட்டுகள் பதுக்கி வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி பாதுகாப்புப்படை வீரர் சத்யபின் குமார் சிங் (வயது 34) உயிரிழந்தார். உயிரிழந்த பாதுகாப்புப்படை வீரர் உத்தரபிரதேச மாநிலம் குஷிநகரை சேர்ந்தவர் ஆவார்.

# கொல்லங்குடி கருப்பாயி மரணம்: எடப்பாடி பழனிசாமி இரங்கல்

**சென்னை, ஜூன் 15-**

பிரபல நாட்டுப்புற பாடகி கொல்லங்குடி கருப்பாயி மறைவுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது., பிரபல நாட்டுப்புற பாடகியும், நடிகையுமான கொல்லங்குடி கருப்பாயிவயது முதிர்வால் காலமானார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றேன். 1993-ம் ஆண்டு தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற பெருமைக்குரிய நடிகை கொல்லங்குடி கருப்பாயி `ஆண் பாவம்', `கோபாலா கோபாலா', `ஆயுசு நூறு' உள்ளிட்ட திரைப்படங்களில்நடித்துள்ளார்.

அகில இயதிய வானொலியில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நிகழ்கலைநிகழ்த்துனராகப் பணியாற்றி உள்ளதோடு, பல்வேறு நாட்டுப்புற பாடல்களைப் பாடி அனைவரது பாராட்டையும், பேரன்பையும் பெற்றவர்.நடிகை கொல்லங்குடி கருப்பாயை இழந்து வாடும் அவரதுகுடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன்திருவடி நிழலில் அமைதிபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் அவர் தெரிவித்துள்ளார்.

### உக்ரைனில் ரஷ்யா தொடர் தாக்குதல்:
# மேலும் ஒரு கிராமத்தை கைப்பற்றியது

**மாஸ்கோ, ஜூன்.15-**

உக்ரைனில் தொடர் தாக்குதல் நடந்து வருவதை முன்னிட்டு மேலும் ஒரு கிராமத்தை கைப்பற்றியது ரஷ்யா.

உலகின் மிகப்பெரிய ராணுவ கூட்டமைப்பான நேட்டோவில் இணைய உக்ரைன் முயன்று வருகிறது. இதனால் தங்களது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என ரஷ்யா இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.அதனை பொருட்படுத்தாமல் உக்ரைன் இணைய முயன்றதால் 2022-ம் ஆண்டு ரஷ்யா போர் தொடுத்தது. 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்த போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதார உதவியை வழங்கின. எனினும் உக்ரைனின் பல நகரங்களைக் கைப்பற்றி தொடக்கம் முதல் ரஷ்யாவின் கையே ஓங்கி உள்ளது.எனவே போரை நிறுத்துவது தொடர்பான ஆலோசனை நடத்த ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடினர். அதன்பிறகு அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில், போரை நிறுத்தாவிட்டால் ரஷ்யா மீதான பொருளாதார தடை விரிவுபடுத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

உக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்த ரஷ்ய அதிபர் புதின் ஒப்புக்கொண்டார். அதன்படி துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இரு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் சந்தித்து பேசினர். அப்போது பேச்சுவார்த்தை முடியும் வரை தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவிக்குமாறு உக்ரைன் வலியுறுத்தியது. ஆனால் ரஷ்ய அதிபர் புதின் அதனை நிராகரித்தார். ஏற்கனவே உக்ரைனின் பல நகரங்களைக் கைப்பற்றி உள்ள நிலையில் தாக்குதல் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. இதில் உக்ரைனின் வடகிழக்கு பிராந்தியமான சுமியில் உள்ள யப்லுனிவ்கா கிராமத்தை கைப்பற்றியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

### ஈரான் ஏவுகணை தாக்குதல்:
# இஸ்ரேலில் 3 பேர் பலி

**ஜெருசலேம், ஜூன் 15-**

இஸ்லே் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் , ஈரான் இடையே பல ஆண்டுகளாக மோதல்போக்கு நிலவி வருகிறது. அதேவேளை, அணு ஆயுதத்தை உருவாக்க ஈரான் முயற்சித்து வருகிறது. ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கினால் தங்கள் நாட்டிற்கு பேராபத்து என்று இஸ்ரேல் கருதுகிறது. இதனால், ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு நடவடிக்கையை தடுக்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் இறங்கியுள்ளது. இதனிடையே, அணு ஆயுத தயாரிப்பை கைவிடும்படி ஈரானிடம், அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தியது. அந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

அதேவேளை, அணு ஆயுத தயாரிப்பிற்கான முக்கிய மூலக்கூறான யுரேனியம் செறிவூட்டலை ஈரான் அதிகரித்தது. தற்போதைய நிலவரப்படி 15 அணு ஆயுதங்களை தயாரிக்கும் அளவிற்கு ஈரான் யுரேனியம் செறிவூட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது. அணு ஆயுத தயாரிப்பின் இறுதி கட்டத்தை ஈரான் எட்டிவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.


இதையடுத்து, ஈரான் அணு ஆயுதத்தை தயாரித்துவிட்டால் தங்கள் நாட்டின் இருப்புக்கு ஆபத்து என கருதிவரும் இஸ்ரேல் நேற்று அதிகாலை திடீர் தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு ஆராய்ச்சி மையங்கள், ஏவுகணை சேமிப்பு கிடங்குகள் உள்பட பல்வேறு இடங்களை குறிவைத்து இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஈரான் அணு விஞ்ஞானிகள், ராணுவ தளபதிகள் உள்பட 78 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த ஏவுகணைகள், டிரோன்கள் இஸ்ரேலின் வான்பாதுகாப்பு அமைப்பால் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், வான் பாதுகாப்பு அமைப்பையும் மீறி சில டிரோன்கள் இஸ்ரேலை தாக்கின. இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேல் மீது ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில் இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

# துபாயில் அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து

**துபாய், ஜூன் 15-**

துபாயில் உள்ள மெரினா பகுதியில் அமைந்துள்ள 67 மாடி குடியிருப்பு கட்டிடத்தில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்து குறித்து தகவல் அறிந்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீ விபத்து ஏற்பட்ட குடியிருப்பு கட்டிடத்தில் மொத்தம் உள்ள 764 வீடுகளில் உள்ள நிலையில், அந்த கட்டிடத்தில் இருந்த 3,820 பேரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். சுமார் 6 மணி நேரம் நீண்ட போராட்டத்திற்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக துபாய் சிவில் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது. இந்த சம்பவத்தில் அதிர்ஷடவசமாக உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**15-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** புதிய ஆடைகள், ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள் சேரும். அரசு மூலம் வரவேண்டிய பண வரவுகள் முழுவதும் வந்து சேரும். காதல் ஈடுபாட்டால் களிப்படைவீர்கள்.

**ரிஷபம்:-** பாக்கிய விருத்தியும், எல்லா வகையிலும் நற்பலன்கள் ஏற்படும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். புண்ணிய காரியங்கள் ஈடுபடும் முகமாக, கோவில் குளம் பணிகளில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்:-** எந்த விஷயத்திலும் நியாயத்திற்கு புறம்பாக நடக்காதீர்கள். அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மனைவியின் கலகத்தால், உறவுகளுக்குள் பகை ஏற்படலாம். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**கடகம்:-** ஆரோக்கியம் மேம்படும். தனவரவு தாராளமாக இருக்கும் நாள். நினைத்த காரியங்கள் நினைத்தது போல் நடக்கும். புத்தி சாதுர்யம் மற்றும் வாக்கு வன்மையால் பொருளாதார நிலை மேம்படும்.

**சிம்மம்:-** எதிர்பார்த்தபடி தனவரவு திருப்திகரமாக இருக்கும். எதிரிகள் பணிவர். எதிர்ப்புகள் குறையும். நெருங்கிய நண்பர்கள் உதவி நன்மை பயக்கும். பெயரும் புகழும் ஓங்கும். புதிய பெண் சினேகம் புத்துணர்வு தரும்.

**கன்னி:-** போக்குவரத்தில் கவனம் தேவை. பிள்ளைகளுக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் உங்கள் திறமை பாராட்டுப் பெறாது.

**துலாம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினையாக்கும் என முன்னேற முயலுங்கள் வெற்றி உங்கள் பக்கம்.

**விருச்சிகம்:-** மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். மனதில் தைரியமும், புதிய தகவல்கள் மூலம் புதிய உற்சாகம் பிறக்கும். நண்பர்கள் உதவி கிடைக்கும். புதிய உத்தியோக வாய்ப்புகள் ஏற்படும்.

**தனுசு:-** இன்று உங்களுக்கு சுமாரான நாள். சுக சௌக்கியத்திற்கு பங்கம் விளையும். எதிர்பார்த்த இனங்களில் பண வரவு தாமதப்படும். எதையும் சாதிக்கும் திறமை பெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும் நாள்

**மகரம்:-** பெண்களால் நன்மை உண்டாகும். ஸ்த்ரீ போக விருத்தி உண்டு. தொழில் மற்றும் வியாபாரம் சம்பந்தமாக பெரியவர்கள் சந்திப்பு இனிதாக அமையும். எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஏற்றம் தரும்.

**கும்பம்:-** சினத்தைக் குறைத்தால் சிக்கல்கள் தீரும். தொழில் புரிவோருக்கு வீண் செலவும், பணமுடையும் ஏற்படலாம். உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். நேர் வழியில் பணம் சம்பாதித்தால் நிம்மதி பிறக்கும்.

**மீனம்:-** கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம். புகழ் ஓங்கும். விருப்பங்கள் நிறைவேறும்.

# விமான விபத்து: காயமடைந்தவர்களுக்கு கார்கே ஆறுதல்

**காந்தி நகர், ஜூன் 15-**

விமான விபத்தில் காயமடைந்தவர்களை காங்கிரஸ் தலைவர் கார்கே நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.



குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் இருந்து 3 நாட்களுக்கு முன் மதியம் 1.39 மணியளவில் ஏர் இந்தியா விமானம் இங்கிலாந்தின் லண்டனுக்கு புறப்பட்டது. அந்த விமானத்தில் 230 பயணிகள் 10 பணியாளர்கள், 2 விமானிகள் என மொத்தம் 242 பேர் பயணித்தனர். புறப்பட்ட சில நிமிடங்களில் விமான நிலையத்தில் இருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மருத்துவ கல்லூரி மாணவர் விடுதி மீது விமானம் விழுந்து வெடித்து சிதறியது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்தனர். மருத்துவ கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர்கள் உள்பட 29 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் மொத்தம் 270 பேர் உயிரிழந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆமதாபாத்தில் ஏர் இந்தியா விமான விபத்து நடைபெற்ற பகுதியை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நேற்று நேரில் பார்வையிட்டார். இதனை தொடர்ந்து விமான விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். கார்கே உடன் கர்நாடக துணை முதல்-மந்திரி டிகே சிவக்குமார் உள்பட காங்கிரஸ் தலைவர்களும் சென்றனர்.

# இஸ்ரேல் தொடர் தாக்குதல்: காசாவில் 16 பேர் பலி

**காசா சிட்டி, ஜூன் 15-**

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது. பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 53 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, காசா முனையில் இஸ்ரேல் ஓராண்டுக்குமேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், காசா முனையில் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் 16 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 55 ஆயிரத்தை கடந்துள்ளது.

# ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்: 78 பேர் பலி

**இஸ்ரேல், ஜூன் 15-**

இஸ்ரேல் நேற்று முன்தினம் அதிகாலை ஆபரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் ஈரான் மீது மிகப்பெரிய அளவில் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் அணுசக்தி நிலையங்கள், ராணுவத் தளபதிகள் மற்றும் முக்கிய உள்கட்டமைப்புகள் இலக்கு வைக்கப்பட்டன. தெஹ்ரான் மற்றும் இஸ்ஃபஹான் உள்ளிட்ட பல நகரங்களில் வெடிச்சத்தங்கள் கேட்டன.

இந்தத் தாக்குதலில் 78 பேர் உயிரிழந்ததாகவும், 320க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் ஈரான் ஐ.நா. தூதர் தெரிவித்தார். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொது மக்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலடியாக, ஈரான் "ஆபரேஷன் ட்ரூ பிராமிஸ் என்ற பெயரில் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் மற்றும் ஜெருசலேமை நோக்கி ஏவுகணைகளை ஏவியது. இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், குறைந்தது 34 பேர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை வரையிலும் இரு நாடுகளும் மாறி மாறி வான்வழித் தாக்குதல்களை நடத்தின. இஸ்ரேல் பல ஈரானிய ஏவுகணைகளை அமெரிக்காவின் உதவியுடன் இடைமறித்ததாகக் கூறியது.

டெல் அவிவ் மற்றும் ஜெருசலேமில் வான்வழி சைரன்கள் ஒலித்தன, மத்திய இஸ்ரேல் முழுவதும் வெடிச்சத்தங்கள் கேட்டன. இரு நாடுகளும் மேலும் தாக்குதல்களைத் தொடரத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள நிலையில், மத்திய கிழக்கில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

### எழுத்தறிவு பெறும் திட்டத்தில்

# தமிழ்நாட்டில் 5 லட்சம் பேர் தேர்ச்சி: முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



**சென்னை, ஜூன் 15-**

முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத 15+ வயதினர் அனைவரும் எழுத்தறிவு பெறும் திட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து பயின்ற 5 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

100 சதவீத தேர்ச்சி விழுக்காட்டோடு தமிழ்நாடு இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' இடத்தைப் பிடித்துள்ளது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில், முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத 15+ வயதினர் அனைவரும் எழுத்தறிவு பெறும் திட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து பயின்ற 5 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 100 சதவீத தேர்ச்சி விழுக்காட்டோடு தமிழ்நாடு இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' இடத்தைப் பிடித்துள்ளது. அறிவொளி ஏற்றும் இச்சாதனைக்கு உழைத்த பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# விமான விபத்து: 6 பயணிகளின் டி.என்.ஏ. மாதிரிகள் உறவினர்களுடன் பொருத்தம்

**காந்திநகர், ஜூன் 15-**

6 பயணிகளின் டி.என்.ஏ. மாதிரிகள் உறவினர்களுடன் பொருந்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். டி.என்.ஏ. அறிக்கை வந்த பிறகு உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து லண்டன் புறப்பட்ட 'ஏர் இந்தியா' பயணிகள் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. விபத்தில் சிக்கிய 'ஏர் இந்தியா' நிறுவனத்தின் 'போயிங் 787-8 டிரீம்லைனர்' விமானத்தில் மொத்தம் 242 பேர் இருந்தனர். இந்த கோர விபத்தில் 241 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயங்களுடன் உயிர் பிழைத்தார்.

இதனிடையே, விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் பாதியாகவோ, அல்லது முழுவதுமாகவோ எரிந்து காணப்படுவதால், அவர்களை அடையாளம் கண்டு உடல்களை உறவினர்களிடம் ஒப்படைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் உடல்களை அடையாளம் காண்பதற்காக, விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரிடம் இருந்து டி.என்.ஏ. மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. டி.என்.ஏ. மாதிரிகளின் பொருத்தத்தை கண்டறியும் பணியை விரைவுபடுத்துவது தொடர்பாக, குஜராத் உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி, மாநில தடயவியல் அறிவியல் ஆய்வக (எஃப்.எஸ்.எல்.) அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டி.என்.ஏ. பொருத்தத்தை கண்டறியும் பணிக்கு மாநில அரசு முன்னுரிமை கொடுத்து உள்ளது என்று தெரிவித்தார். இந்த நிலையில் 6 பயணிகளின் டி.என்.ஏ. மாதிரிகள் உறவினர்களுடன் பொருந்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டி.என்.ஏ. அறிக்கை வந்த பிறகு உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க தூதரகம் அறிவுரை

**டெஹ்ரான், ஜூன் 15-**

ஈரான் மீது இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தி வருவதை முன்னிட்டு இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் அதிரடி தாக்குதலை தொடுத்து உள்ளது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருவதால் மத்திய கிழக்கில் பெரும் போர் பதற்றம் நிலவி வருகிறது. இந்த நிலையில் ஈரானில் வசிக்கும் இந்தியர்களுக்கு தலைநகர் டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் எச்சரிக்கை விடுத்து உள்ளது. அதன்படி, 'நடப்பு சூழலை கருத்தில் கொண்டு ஈரானில் வாழும் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் விழிப்புடன் இருக்க வேண்டும். தேவையற்ற பயணங்களை தவிர்த்து, பாதுகாப்பாக இருக்க வேண்டும். உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தலை கடைப்பிடிக்க வேண்டும்' என கூறியுள்ளது. இதைப்போல இஸ்ரேலில் வசித்து வரும் இந்தியர்களும் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி எச்சரிக்கையுடன் இருக்குமாறு ஜெருசலேமில் உள்ள இந்திய தூதரகம் கேட்டுக்கொண்டு உள்ளது.

# விசைப்படகுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் நிறைவு

**சென்னை, ஜூன் 15-**

சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுக மீனவர்கள் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள விசைப்படகு மீனவர்கள் உற்சாகத்துடன் கடலுக்குச் செல்லத் தயாராகி வருகின்றனர்.

வங்கக் கடல் பகுதியில் விசைப் படகுகள் மூலம் மீன் பிடிக்க விதிக்கப்பட்ட 61 நாட்கள் தடைக்காலம் நேற்று (சனிக்கிழமை) நள்ளிரவுடன் முடிவடைவதையொட்டி சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுக மீனவர்கள் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள விசைப்படகு மீனவர்கள் உற்சாகத்துடன் கடலுக்குச் செல்லத் தயாராகியுள்ளனர்.

மீன்கள் இனப்பெருக்கத்தை கருத்தில் கொண்டு வங்கக் கடலில் ஆண்டுதோறும் ஏப்.15 முதல் ஜூன் 14-ஆம் தேதி வரை 61 நாட்களுக்கு மீன்பிடிக்க தடைக்காலம் அமல்படுத்தப்படும். நிகழாண்டும் தடைக்காலம் கடந்த ஏப்.15-ஆம் தேதி தொடங்கியது. இந்தத் தடைக்காலம் சனிக்கிழமை (ஜூன் 14) நள்ளிரவுடன் நிறைவடைவதையொட்டி, தமிழகம் முழுவதும் மீனவர்கள் உற்சாகத்துடன் கடலுக்குச் செல்லத் தயாராகி வருகின்றனர்.

சென்னை காசிமேடு துறைமுகத்தில் மட்டும் சுமார் 800 விசைப்படகுகள் உள்ளன. தடைக்காலத்தையொட்டி விசைப் படகுகளை பழுது நீக்கி புதுப்பிக்கும் பணிகள் கடந்த இரு மாதங்களாக நடைபெற்று வந்தன. இந்த நிலையில், கடலுக்குச் செல்லும் விசைப்படகுகளில் ஐஸ்கட்டிகள், டீசல் நிரப்பும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும், ஒரு வார பயணத்திற்கான மளிகை சாமான்கள், உணவுப் பொருள்கள், சமையல் பாத்திரங்கள், எரிவாயு சிலிண்டர்கள் உள்ளிட்ட அனைத்து பொருள்களையும் வாங்கி படகுகளில் ஏற்றும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# குற்றால அருவிகளில் குளிக்க அனுமதி



**தென்காசி, ஜூன் 15-**

குற்றால அருவிகளில் வெள்ளம் குறைந்ததால் சுற்றுலாப் பயணிகளுக்கு குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருநாட்களாக விட்டு விட்டு மழை பெய்தது .மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக குற்றால அருவிகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதனால் பாதுகாப்பு கருதி மெயின் அருவி, ஐந்தருவி, சிற்றருவி, புலியருவி மற்றும் பழைய குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை சற்று குறைந்துள்ளது. இதனால் குற்றால அருவிகளில் வெள்ளம் குறைந்ததால் சுற்றுலாப்பயணிகளுக்கு குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது, குற்றாலம் பிரதான அருவி, ஐந்தருவி, புலியருவி ஆகியவற்றில் சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### காவல் நிலையம் மீது தாக்குதல்:

# கடும் நடவடிக்கை எடுக்க இ.பி.எஸ். வலியுறுத்தல்



**சென்னை, ஜூன் 15-**

வி.சத்திரப்பட்டி காவல் நிலையத் தாக்குதலில் ஈடுபட்டோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள வி. சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் நேற்று புகுந்த மர்மநபர்கள், காவல் நிலையத்தைத் தாக்கி, சூறையாடியதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

இதனையடுத்து, எனது அறிவுறுத்தலின்படி, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார், அக்காவல் நிலையத்தை பார்வையிடச் சென்றபோது, அவர் காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளதற்கு எனது கடும் கண்டனம். வி.சத்திரப்பட்டி காவல் நிலையத் தாக்குதலில் ஈடுபட்டோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு

**சென்னை, ஜூன் 15-**

தங்கம் விலை நேற்று முன்தினம் ஒரே நாளில் பவுனுக்கு ரூ.1,560 உயர்ந்து, ரூ.74 ஆயிரத்து 360-க்கு விற்பனை ஆன நிலையில் தங்கம் விலை மீண்டும் எகிறத் தொடங்கியுள்ளது.

சர்வதேச பொருளாதார நிலைக்கு ஏற்ப தங்கம் விலை நாள்தோறும் நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணிகள் தங்கம் விலையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உலகில் ஏற்பட்ட பல பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கடந்த சில மாதங்களாக தொடர்ந்து உயர்ந்து வந்த தங்கம் விலை கடந்த ஏப்ரல் மாதம் புதிய உச்சம் தொட்டது. இதையடுத்து மே மாதத்தில் ஏற்ற இறக்கங்களுடன் இருந்து வந்தது. இந்த சூழலில், ஜூன் மாதம் தொடங்கியதில் இருந்தே தொடர்ந்து உயர்ந்து வந்த தங்கம் விலை, சில நாட்கள் சரிவைச் சந்தித்தது. இந்நிலையில் தற்போது தங்கம் விலை மீண்டும் எகிறத் தொடங்கி இருக்கிறது. கடந்த 10-ந் தேதி வரை விலை குறைந்து வந்த நிலையில், 11-ந் தேதியில் இருந்து ஏறுமுகத்தில் தங்கம் இருந்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் அதன் விலை அதிரடியாக உயர்ந்து காணப்பட்டது. 3 நாட்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.9 ஆயிரத்து 100-க்கும், ஒரு பவுன் ரூ.72 ஆயிரத்து 800-க்கும் விற்பனை ஆனது. நேற்று முன்தினம் மாலை நேர நிலவரப்படி, ஒரே நாளில் கிராமுக்கு ரூ.195-ம், பவுனுக்கு ரூ.1,560-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9 ஆயிரத்து 295-க்கும், ஒரு பவுன் ரூ.74 ஆயிரத்து 360-க்கும் புதிய உச்சம் தொட்டு விற்பனை ஆனது. வெள்ளி விலை நேற்று கிராமுக்கு ரூ.1-ம், கிலோவுக்கு ரூ.1,000-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.120-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதன்படி கடந்த 3 நாட்களில் மட்டும் தங்கம் பவுனுக்கு ரூ.2,800 உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னதாக கடந்த ஏப்ரல் 22-ம் தேதி ஒரு பவுன் ரூ.74 ஆயிரத்து 320-க்கு விற்பனை ஆனதுதான் உச்சபட்ச விலையாக பார்க்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் விலை உயர்வு அதனையும் கடந்து இதுவரை இல்லாத வரலாறு காணாத உச்சத்தை தொட்டு இருந்தது.

இந்நிலையில் நேற்று தங்கம் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. இதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.200 உயர்ந்து ஒரு சவரன் ரூ.74,560-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.25 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,320-க்கு விற்பனை ஆனது. வெள்ளி விலையில் மாற்றம் இன்றி ஒரு கிராம் ரூ.120-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது.

தங்கத்தின் மீதான முதலீடு ஏற்கனவே அதிகரித்து வந்ததால், தங்கம் விலை உயர்ந்து வந்தது. ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதலை நடத்தியது. இதனால் போர்ப்பதற்றம் மீண்டும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தங்கத்தின் மீதான முதலீடு மேலும் அதிகரித்து, அதன் விலையும் ஏற்றம் கண்டு இருக்கிறது.

## Format C-2

**( For political party to publish in website, newspapers, TV )**

**Declaration about criminal antecedents of candidates set up by the party**

**( As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr. )**

| | | |
|---|---|---|
| Name of Political Party | : | ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM |
| *Name of the Election | : | BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025 |
| Name of State/UT | : | TAMIL NADU |

| 1 | 2 | 3 | 4 | | 5 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (A) Pending criminal cases | | (B) Details about cases of conviction for criminal offences | | |
| Sl. No. | Name of constituency | Name of candidate | Name of Court, case No. & status of the case(s) | Sections of the Acts concerned & brief description of offence(s) | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | **Maximum Punishment Imposed** |
| 1 | Biennial Elections to Council of States, 2025 | Thiru. M.DHANAPAL | Not Applicable | Demonstra -tion without getting permission from the police and disturbing the traffic. U/s. 189(2), 126(2), 292 of BNS Act. | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | | | Not Applicable | Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. | Not Applicable | Not Applicable | Not Applicable |

* In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

**R.M. BABU MURUGAVEL, B.A., B.L.,**
Party Spokesperson,
Party Advocate's Wing Joint Secretary
All India Anna Dravida Munnetra Kazhagam, Head Office.

## Format C-7

**(for political parties to publish in the newspapers, social media platforms & website of the party)**
**Information regarding individuals with pending criminal cases, who have been selected as candidates, along with the reasons for such selection, as also as to why other individuals without criminal antecedents could not be selected as candidates.**
**(As per the Commission's directions issued in pursuance of the Order dated 13.02.2020 of the Hon'ble Supreme Court in contempt petition(C) no. 2192 of 2018 in WP(C) no. 536 of 2011)**

| | | |
|---|---|---|
| Name of Political Party | : | ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM |
| *Name of the Election | : | BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025 |
| Name of State/UT | : | TAMIL NADU |
| Name of the Candidate | : | Thiru. M. DHANAPAL |

| Sl. No. | | | | | |
|---|---|---|---|---|---|
| | Criminal antecedents | | | | |
| 1. | a. | Nature of the offences | Demonstration without getting permission from the police and disturbing the traffic.U/s. 189(2), 126(2), 292 of BNS Act. | Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. | Not Applicable |
| | b. | Case No. | Cr. No. 685 /2024 Maduranthakam, PS | Cr. No. 77/2025 Thirukazhukundram, PS | Not Applicable |
| | c. | Name of the Court | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | d. | Whether charges have been framed or not (Yes/No) | No | No | Not Applicable |
| | e. | Date of conviction, if any | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | f. | Details of punishment undergone, if any | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | g. | Any other information required to be given | Not Applicable | Not Applicable | Not Applicable |
| 2. | The reasons for the selection of the candidate. Selection shall be with reference to the qualifications, achievements and merit of the candidate, and not mere "winnability" at the polls (not more than 100 words) | | The selected candidate was a former MLA., and a very dedicated and a dynamic party worker. He has a very good track record and having great respect and confidence. The cases above mentioned are politically motivated, and the same was for the purpose of public welfare. We believe that there will be no adverse outcome against the alleged candidate. | | |
| 3. | Reasons as to why other individuals without criminal antecedents could not be selected as candidates (not more than 100 words) | | The above selected Candidate is more competent person than other, He is well educated and He is a doctorate in Law and Criminology, the selected candidate is a meritorious and well known person in party as well in general public. Besides, the cases filed against him are politically motivated and false in nature. | | |

* In the case of election to Council of States or States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

**R.M. BABU MURUGAVEL, B.A., B.L.,**
Party Spokesperson,
Party Advocate's Wing Joint Secretary
All India Anna Dravida Munnetra Kazhagam, Head Office.

ஈரோடு மாவட்டத்தில்

# 996 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.96.20 கோடி மதிப்பீட்டில் வங்கி கடனுதவிகள்: கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா வழங்கினார்



ஈரோடு.ஜூன்.15-

ஈரோடு மாவட்டம், திண்டல், வேளாளர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்கும் விழாவில் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, , 996 குழுக்களுக்கு ரூ.96.20 கோடி மதிப்பீட்டில் வங்கி கடனுதவிகளை வழங்கினார்;. கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் , தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர் மகளிருக்கு நிதி சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்று மகளிர் திட்டம் சார்பில் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள்.

குறிப்பாக மகளிர் சுய தொழில் தொடங்கி தொழில் முனைவோர்களாக உருவாக்கிடவும், பொருளாதார ரீதியாக உயர்நிலை அடையவும், அவர்களின் நிதி மேம்பாட்டிற்காகவும் பொருளாதார கடனுதவிகளை வழங்கி வருகின்றார்கள். மேலும், இன்றைய தினம் ஈரோடு மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் 531 குழுக்களுக்கு ரூ.57.20 கோடி மற்றும் நகர்புரப்பகுதிகளில் 389 குழுக்களுக்கு ரூ.38.07 கோடி என மொத்தம் 920 குழுக்களுக்கு ரூ.95.27 கோடி மகளிர் சுய உதவிக்குழுவினரின் வங்கி இணைப்பு மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 9 பயனாளிகளுக்கு ரூ31.00 இலட்சம் கடனுதவியாகவும் மற்றும் 67 பயனாளிகளுக்கு ரூ.62 இலட்சம் தொழில் முனைவோர் கடனுதவிகள் என மொத்தம் ரூ.96.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 8,867 மகளிர் சுய உதவிக்குழுக்களில், 94,281 உறுப்பினர்களாக உள்ளார்கள்.

இது ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெண்களின் மொத்த தொகையில் 10 சதவிகிதம் மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ளார்கள். மீதமுள்ள மகளிரும் இத்திட்டத்தில் இணைந்து தங்கள் குடும்பத்தையும், தாங்கள் வாழும் பகுதியை மேம்படுத்திட வேண்டும்.

கடந்த ஆண்டு மகளிர் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பிற்கு ரூ.1,120 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டது. இந்தாண்டு ரூ.1,168 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னையில் 11.06.2025 அன்று நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழு தின விழாவை முன்னிட்டு சிறந்த சமுதாய அமைப்புகளுக்கான மணிமேகலை விருதுகள் வழங்குதல், மாநில அளவிலான கலாச்சார போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்குதல் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகளை வழங்கினார்கள்.மாநில அளவிலான பன்முக கலாச்சார போட்டியான கயிறு இழுத்தல் போட்டியில் முதலிடம் பெற்ற கோபிச்செட்டிப்பாளையம் வட்டாரம் பெருந்தலையூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு ரூ.25,000- பரிசுத்தொகை மற்றும் கேடயம், சிறந்த சமுதாய அமைப்புகளுக்கான மணிமேகலை விருது பெற்ற சத்தியமங்கலம் வட்டாரம், சதுமுகை ஊராட்சி, துளசி மகளிர் சுய உதவிக் குழு மற்றும் சலங்கபாளையம் பேரூராட்சி, விசாலாட்சி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான பரிசுத்தொகை தலா ரூ.1.00 இலட்சம் மற்றும் கேடயமும், தூக்கநாயக்கன் பாளையம் வட்டாரம், புஞ்சைத்துறையம்பாளையம் ஊராட்சிக்கு சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான பரிசுத் தொகை ரூ.3.00 லட்சம் மற்றும் கேடயமும் 11.06.2025 அன்று நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழு தின விழாவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. விருதுகள் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

இன்றைய தினம் கலெக்டர் ; 920 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.95.27 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், ஒரிட சேவை மைய கடனுதவியாக 31 குழுக்களுக்கு ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவியும், வட்டார வணிக வளமைய கடனுதவியாக 18 குழுக்களுக்கு ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவியும்,16 குழுக்களுக்கு ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் தொழில் முனைவோர் கடனுதவியும், சுய வேலை வாய்ப்புத்திட்டம் - தொழில் குழு வங்கி கடன் (ளுநுP- பு) 2 குழுக்களுக்கு ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் 9 குழுக்களுக்கு ரூ.31.00 இலட்சம் கடனுதவியாகவும் மற்றும் என மொத்தம் 996 குழுக்களுக்கு ரூ.96.20 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்கடாசலம் (அந்தியூர்), மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், கோபிசெட்டிபாளையம் நகர் மன்ற தலைவர் நாகராஜ், சத்தியமங்கலம் நகர் மன்ற தலைவர் .ஜானகி ராமசாமி, மகளிர் திட்ட அலுவலர்.பிரியா, உதவி ஆணையர் (தொழிலாளர் நலத்துறை) முருகேசன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் விவேகானந்தன், உதவி மகளிர் திட்ட அலுவலர்கள் பாஸ்கர், .பபித்தா, .சுதா, ஜான் லிங்டன், , ஜோதிகிருத்திகா உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**நீலகிரிமாவட்டஅ.தி.மு.கஅம்மாபேரவைமாவட்டஇணைச்செயலாளராகநியமிக்கப்பட்டுள்ள தாம்பட்டி கா.சிவகுமார், மாவட்ட செயலாளர் கப்பச்சி டி.வினோத்திற்கு சால்வை அணிவித்து புத்தகம் வழங்கி வாழ்த்து பெற்றார். உடன் அமைப்புச் செயலாளர் கே ஆர் அர்ஜுனன், பேரவை மாவட்ட செயலாளர் சாந்தி ராமு, மாவட்டத் துணைச் செயலாளர் கோபாலகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.**



**ஈரோடு மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக பொது விநியோகத் திட்ட குறைதீர்க்கும் முகாம் நேற்று வீரப்பம்பாளையம் பகுதியில் நடைபெற்றது. இதில் கூட்டுறவு சார் பதிவாளர் கு.கோவிந்தன் கலந்து கொண்டு பொதுமக்களிடையே மனுக்களை பெற்றுக் கொண்டார். இதில் வட்ட வழங்கல் அலுவலர் க.கணபதி, இளநிலை வருவாய் அலுவலர் துளசி மணி உட்பட பலர் கலந்து கொண்டனர்**

அம்மாபேட்டையில்

# புகையிலை மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



ஈரோடு ஜூன் 15-

அம்மாபேட்டை பெரியசாமி அரசு நிதி உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி மாணவ,மாணவியர்களை கொண்டு அம்மாபேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பாக புகையிலை மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பேரணியில் மாணவ, மாணவியர்கள் புகையிலை மற்றும் போதை விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தி கொண்டு புகையிலை மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு கோஷமிட்டவாறு பள்ளியில் இருந்து துவங்கி முக்கிய வீதிகள் வழியாக அம்மாபேட்டை பேருந்து நிறுத்தம் வரை சென்று மீண்டும் அதே வழியில் திரும்ப பள்ளிக்கு வந்து சேர்ந்தது. பேரணியின் வழி நெடுகிலும் பொதுமக்களுக்கு புகையிலை மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

இந்த பேரணியில் ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவ பணிகள் அலுவலக மாவட்ட நலக்கல்வியாளர் சிவகுமார், மாவட்ட சுகாதார அலுவலக மாவட்ட புகையிலை தடுப்பு பிரிவு சமூக சேவகர் சங்கீதா, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் பிரகாசம், வட்டார மருத்துவம் சாரா மேற்பார்வையாளர் மூர்த்தி, சுகாதார ஆய்வாளர்கள் ஜெகதேஷ் குமார், கருணா மூர்த்தி, ராஜசேகர் ஐசக், சீனிவாசரகுபதி, ஸ்ரீநாத், ரஞ்சித் குமார், பள்ளி தலைமை ஆசிரியர், இருபால் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் 152 பேர்கள் கலந்து கொண்டனர்.



**அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியை கோவையில் உள்ள அவரது அலுவலகத்தில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில துணை தலைவர் என்.நந்தகோபால் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.**

நீலகிரி மாவட்டத்தில்

# கீழ்குந்தா பேரூராட்சி, இத்தலார், நஞ்சநாடு ஊராட்சி பகுதிகளில் ரூ.82.53 லட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு



ஊட்டி,ஜூன்.15-

நீலகிரி மாவட்டம், கீழ்குந்தா பேரூராட்சி, இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிப்பகுதிகளில் ரூ.82.53 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட மற்றும் நடைபெற்று வரும் வளர்ச்;சி திட்டப்பணிகளை, கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முதலாவதாக, கலெக்டர் , கீழ்குந்தா பேரூராட்சிக்குட்ட மஞ்சூர் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில்; ரூ.9.80 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இருப்பு அறையுடன் கூடிய சமையலறை கட்டடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து, முள்ளிமலை அரசு உயர்நிலைப்பள்ளியில்; ரூ.9.62 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இருப்பு அறையுடன் கூடிய சமையலறை கட்டடத்தினையும், இத்தலார் ஊராட்சி அலுவலகம் அருகில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.16.11 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக்கடையினையும், சிறப்புப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நூலக கட்டடத்தினையும், இத்தலார் ஊராட்சிக்குட்பட்ட அப்புக்கோடு பகுதியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையினையும், நஞ்சநாடு ஊராட்சிக்குட்பட்ட முத்தோரை பாலாடா பகுதியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய கூட கட்டடத்தினையும் என மொத்தம் ரூ.82.53 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட மற்றும் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.பின்னர், இத்தலார்; மற்றும் நஞ்சநாடு ஊராட்சி அலுவலகங்களில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்ஆய்வின் போது உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், சிவக்குமார், கீழ்குந்தா பேரூராட்சி செயல் அலுவலர் மனோகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# தேசிய மக்கள் நீதிமன்றத்தில் 514 வழக்குகளுக்கு தீர்வு



ஊட்டி, ஜூன்.15-

நீலகிரி மாவட்டத்தில் தேசிய மக்கள் நீதிமன்றத்தில் 514 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.

நீதிமன்றத்தில் வழக்குகள் அதிகமாக தேங்குவதை தவிர்க்கவும், நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு காணவும், சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் தேசிய மற்றும் மாநில அளவிலான மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) நடத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2015 முதல், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் தேசிய லோக் அதாலத் நடத்தப்படுகிறது.

இதன்படி நீலகிரி மாவட்டம் ஊட்டியில் தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றம் நீலகிரி மாவட்டத்தில் சட்டப்பணிகள் ஆணை குழு தலைவரும் மாவட்ட நீதிபதியுமான முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மகிளா கோர்ட்டு நீதிபதி செந்தில்குமார், குடும்ப நல நீதிபதி லிங்கம், தொழிலாளர் நீதிமன்ற நீதிபதி சந்திரசேகரன், தலைமை குற்றவியல் நீதிபதி சசிகலா, சார்பு நீதிபதி பாரதி பிரபா, மாவட்ட சட்டப் பணிகள் குழு செயலாளரும் சார்பு நீதியுமான பாலமுருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதேபோல் குன்னூர், கூடலூர், பந்தலூர், கோத்தகிரி ஆகிய நீதிமன்றங்களிலும் நடந்தது.

இதில் நிலுவையில் உள்ள சமரசம் செய்யக்கூடிய சிறு குற்ற வழக்குகள், சிவில் வழக்குகள், காசோலை மோசடி, மோட்டார் வாகன விபத்து வழக்குகள், நில ஆர்ஜித வழக்குகள், வங்கி வழக்குகள், வாரா கடன் வழக்குகள், குடும்ப பிரச்சினை சம்பந்தமான வழக்குகள் என 1719 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் ரூ.2 கோடியே 67 லட்சத்து 70 ஆயிரத்து 68 மதிப்பிலான வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது. மொத்தம் 514 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.

இதுகுறித்து கோர்ட்டு நிர்வாகத்தினர் கூறுகையில், தேசிய மக்கள் நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்பு இறுதியானது. இதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய முடியாது. மக்கள் நீதிமன்றத்தில் முடிக்கப்படும் வழக்குகளில் முத்திரைத்தாள் வாயிலாக செலுத்திய கட்டணம் திரும்ப கிடைக்கும். இதனை வழக்காடிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும், என்றனர்.

சென்னிமலை பகுதிகளில்

# சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்காள தேசத்தை சேர்ந்த 4 பேர் கைது

ஈரோடு , ஜூன். 15-

ஈரோடு மாவட்டம் பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி லட்சக்கணக்கான வட மாநிலத்தவர்கள் பெருந்துறை சிப்காட் பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வருகின்றனர்.

இதேபோல் சென்னிமலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் வட மாநிலத்தவர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் வங்களா தேசம் நாட்டைச் சேர்ந்த சிலரும் சட்ட விரோதமாக குடியேறி பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருவதாக போலீசுக்கு புகார்கள் வந்தன.

அதன் அடிப்படையில் நேற்று சென்னிமலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் க்யூ பிரிவு போலீசார் அதிரடி சோதனை மேற்கொண்டனர். இதில் வங்களாதேசத்தைச் சேர்ந்த

முகமது நைம் உசேன் (18),முகமது மினார் ஒசைன் (28),முகமது டோரிகுல் இஸ்லாம்(32) மற்றும் முகமது குட்டுஸ் ஒசைன்(31) ஆகிய நான்கு பேரை பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது சட்டவிரோதமாக தங்கி கூலி வேலை செய்து வந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. இதை அடுத்து 4 பேரையும் போலீசார் கைது செய்தனர். கொடுத்த தகவலின் பெயரில் மேலும் சிலரையும் தேடி வருகின்றனர்.

ஈரோட்டில் துணிகரம்

# கோவில் உண்டியலை உடைத்து பணம் கொள்ளை: மர்ம நபர்கள் கைவரிசை

ஈரோடு, ஜூன். 15-

ஈரோடு ரங்கம்பாளையம் பஸ் நிறுத்தம் அருகே மாகாளியம்மன் கோயில் உள்ளது. அப்பகுதியை சேர்ந்தவர்களால் இக்கோவில் நிர்வாகிக்கப்பட்டு வரப்படுகிறது.

ரங்கம்பாளையம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி சேர்ந்த மக்கள் கோவிலில் வழிபட்டு வந்தனர். நேற்றுமுன்தினம் இரவு பூஜை முடிந்ததும் பூசாரி ஆறுமுகம் கோவில் கதவை பூட்டி விட்டு சென்று விட்டார். இந்நிலையில் இன்று காலை பூஜைக்காக பூசாரி ஆறுமுகம் வந்து பார்த்த போது கோவில் பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். கோவில் வளாகத்தில் இருந்த உண்டியல் பூட்டு உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் கொள்ளை போய் இருப்பது தெரியவந்தது. இது குறித்து தாலுகா போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

நேற்றிரவு கோவிலில் புகுந்த கொள்ளையர்கள், அங்கிருந்த உண்டியலை உடைத்து கைவரிசை காட்டியது தெரியவந்துள்ளது. உண்டியலில் ரூ.30,000 வரை இருந்துள்ளது. இது குறித்து தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்து வருகின்றனர்.உண்டியலை உடைத்து கொள்ளை போன சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது



**ஈரோடு மாவட்டத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற வேளாண் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியினை விவசாயிகள், பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.**

# பெரம்பூர் ரயில் நிலையம் எதிரே சாலையில் திடீர் பள்ளம்: அதிகாரிகள் ஆய்வு

**சென்னை ஜூன் 15-**

பெரம்பூர் ரயில் நிலையம் எதிரே உள்ள சாலையில் நேற்று காலை 8 மணியளவில் திடீர் பள்ளம் ஏற்பட்டது. 6 அடி ஆழத்திற்கு பள்ளம் ஏற்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. உடனடியாக அப்பகுதி மக்கள் காவல் துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில், செம்பியம் போக்குவரத்து உதவி கமிஷனர் சத்தியமூர்த்தி, இன்ஸ்பெக்டர் சுடலைமணி உள்ளிட்ட போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, தடுப்புகள் வைத்து போக்குவரத்தை சரிசெய்தனர்.

**அதிகாரிகள் ஆய்வு**

அந்த பகுதியில், 6 அடி ஆழத்திற்கு கீழ் மெட்ரோ வாட்டர் ராட்சத பைப்லைன் செல்வதால் உடனடியாக குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி 6வது மண்டல குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பகுதி பொறியாளர் மைதிலி, பகுதி துணை பொறியாளர் சுரேஷ்குமார், மாநகராட்சி உதவி பொறியாளர் சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு செய்தனர். நேற்று முன்தினம் இரவு பெய்த மழை காரணமாக மண் அரிப்பு ஏற்பட்டு சுமார் 6 அடி ஆழத்திற்கு பள்ளம் விழுந்திருக்கலாம் எனவும், பள்ளம் விழுந்த பகுதியிலிருந்து சுமார் 50 அடி தூரத்தில் மெட்ரோ ரயில் பணி நடைபெற்று வருவதால் அதனால் பாதிப்பு ஏற்பட்டதா எனவும் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

பின்னர், பள்ளத்தை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தேவைப்படும் பட்சத்தில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படும், என போக்குவரத்து போலீசார் தெரிவித்தனர். கனரக வாகனங்கள் மட்டும் மாதவரம் நெடுஞ்சாலை மேல்பட்டி பொன்னப்பன் தெரு, பி.பி சாலை வழியாக செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சம்பவத்தால் பெரம்பூர் ரயில் நிலையம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# கட்டிட கழிவு, உடைந்த செங்கற்களை சாலையோர, நடைபாதை சரிவான இணைப்புக்கு பயன்படுத்த தடை: காற்று மாசு, பொதுமக்கள் நலன் கருதி மாநகராட்சி உத்தரவு

**சென்னை ஜூன் 15-**

சாலையோரங்கள் மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் உடைந்த செங்கற்களை சரிவான இணைப்புகளுக்காக பயன்படுத்துதல் முற்றிலும் தடை செய்யப்படுவதாக சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்ட அறிக்கை: சென்னை மாநகராட்சி பகுதிகளில் சாலையோரங்கள் மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் கட்டிடங்களை இணைத்திடும் சரிவான இணைப்புகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. சென்னை மாநகராட்சியை தூய்மையை பராமரிக்கும் வகையில் கட்டிடம் மற்றும் இடிபாட்டு கழிவுகள் அகற்றுதல், சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானம் குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.இந்நிலையில், தற்போது குடிமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்களது கட்டிடத்திற்கு சாலை மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் சரிவான இணைப்புகளுக்காக உடைந்த செங்கற்கள், சுண்ணாம்பு, கட்டிடக் கழிவுகள், மண் கலவைகள் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். இதனால், தூசி பரவல் மற்றும் காற்று மாசுபாடு ஏற்படுகிறது. கட்டுமானக் கழிவுகள் மற்றும் மண் துகள்கள் மழைநீர் வடிகால்களில் சேர்வதால், மழைநீர் தேங்கி நீரோட்டத்தை தடை செய்கின்றன. மழைக்காலங்களில் மழைநீர் வடிகால்கள் அடைபட்டு சாலைகளைல் தண்ணீர் தேங்குவதால் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படுகிறது.இதன் தொடர்ச்சியாக, மக்கள் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையிலும், மழைநீர் வடிகால் அமைப்புகள் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யும் நோக்கிலும், சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள சாலையோரங்கள் மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் குடியிருப்புகள், வணிக வளாகங்கள், வணிக நிறுவனங்கள், அலுவலக கட்டிடங்கள் உள்ளிட்ட பல்வேறு பயன்பாட்டு கட்டிடங்களை இணைத்திடும் சரிவான இணைப்புகள் தொடர்பாக பின்வரும் வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுகின்றன. வழிகாட்டு நெறிமுறைகள்:

கட்டிட கழிவுகள் மற்றும் உடைந்த செங்கற்களை சரிவான இணைப்புகளுக்காக பயன்படுத்துதல் முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

அதற்கு பதிலாக, மரம் அல்லது இரும்பு போன்ற சுற்றுச்சூழல் மாசுபாடு இல்லாத பொருட்களைப் பயன்படுத்தலாம்.

இந்த இணைப்புகள் பாதுகாப்பான பொருத்தப்பட்டிருக்க வேண்டும். பொதுநலப் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டும். மேலும், மழைநீர் வடிகால் பராமரிப்புக்கு எவ்வித தடையில்லாதவையாகவும் இருக்க வேண்டும்.இந்த வழிகாட்டு நெறிமுறைகள் வருகின்ற ஜூன் மாதம் 30ம் தேதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் பின்னர் இந்த வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் மீது கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மைக்கான வழிகாட்டுதல்கள் 2025ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் சென்னை மாநகராட்சியின் www.chennaicorporation.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாலையோரங்கள் மற்றும் நடைபாதை விளிம்புகளுடன் கட்டிடங்களை இணைத்திடும் சரிவான இணைப்புகள் குறித்த வழிகாட்டுதல்களை பொதுமக்கள் பின்பற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் அலுவலகத்தில் ஆஜரான 2 போலி வழக்கறிஞர்கள் கைது

**சென்னை ஜூன் 15-**

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சிலில் செயலாளர் கிரிதா செந்தில் குமார் என்பவர் உயர் நீதிமன்றம் காவல் நிலையத்தில், மதுரை திருமங்கலத்தைச்சேர்ந்த கவிதா மற்றும் சேலத்தை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் டெல்லி பார்கவுன்சிலில் 2020ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்ததை, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சிலுக்கு மாற்றுவதற்கு கடந்த 28.04.2022 ல் இந்திய பார்கவுன்சிலில் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்திய பார்கவுன்சில் மேற்படி நபர்களை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சிலில் பதிவு செய்வதற்கு ஆட்சேபனை குறித்து கடிதம் மூலம் கேட்டதின் பேரில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் அலுவலர்கள் மேற்படி விண்ணப்பதாரர்கள் புது டெல்லியில் உள்ள பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பு முடித்ததாக சமர்பித்த ஆவணங்களின் உண்மை தன்மையை கண்டறிய கடிதம் மூலம் பெற்ற அறிக்கையின்படி இருவரின் கல்வி சான்றிதழ்கள் போலியானது என தெரியவந்தது.

எனவே பார் கவுன்சில் அலுவலகத்திற்கு போலி ஆவணங்களுடன் வந்திருந்த கவிதா, மற்றும் கிருஷ்ணமூர்த்தி இருவர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி உயர் நீதிமன்றம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

உயர் நீதிமன்றம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.கவிதா, 2.கிருஷ்ணமூர்த்தி, ஆகிய இருவரை பார்கவுன்சில் அலுவலகத்தில் வைத்து கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 2 டெல்லி பார்கவுன்சில் அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

# மதுரவாயல் பகுதியில் இருவர் மீது தாக்குதல்: 2 பேர் கைது

**சென்னை ஜூன் 15-**

சென்னை, மதுரவாயல், பெருமாள் கோவில் தெருவில் வசிக்கும் நரேந்திரன், என்பவர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். கடந்த 12 ந் தேதி அன்று இரவு நரேந்திரன் வேலை முடித்துவிட்டு அவரது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது அதே தெருவில் குடியிருக்கும் 2 பேர் தெருவில் நின்று கொண்டிருந்தவர்களை பார்த்து தகாத வார்த்தையால் பேசிக் கொண்டும், தெருவில் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனங்களை காலால் மிதித்து தள்ளி விட்டும் பிரச்சனை செய்து கொண்டிருந்தனர். நரேந்திரன் அந்த 2 நபர்களிடம் சென்று தகராறு செய்ய வேண்டாம் எனக் கூறவே அவரை தகாத வார்த்தையால் பேசி தாக்கினர், அவரை காப்பற்ற வந்த பாட்டி முருகம்மாளையும் அடித்து கீழே தள்ளி விட்டனர். இருவரும் வலி தாங்க முடியாமல் சத்தம் பேடவே, அந்த தெருவில் இருந்தவர்கள் ஓடி வந்து பிடிக்க முயன்ற போது தெருவில் இருந்த தண்ணீர் பிடிக்கும் பிளாஸ்டிக் டிரம்களை உடைத்துவிட்டு, கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து எதிரிகள் இருவரும் தப்பிச் சென்று விட்டனர். மேற்படி சம்பவம் குறித்து நரேந்திரன் மதுரவாயல் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். மதுரவாயல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.சூர்யபிரகாஷ், 2.சையதுஅபுதாயர், ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவர் மீதும் இதே காவல் நிலையத்தில் 1 குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது தெரியவந்தது.

Printed, Published and
Owned by S.Manimaran
and Printed at
Manimaran Printers
C3, Private industrial Estate,
sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் 25 இடங்களில் கட்டப்பட்டு வரும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் விரைவில் திறந்து வைக்கப்படும்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்




**சென்னை,ஜூன்.15**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் (13.06.2025) சென்னையில், மகப்பேறு மயக்கவியல் தர மேம்பாட்டிற்கான மருத்துவ பயிலரங்கத்தினை தொடங்கி வைத்து, மயக்கவியல் துறையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கி, விழா பேருரையாற்றினார்கள். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மக்கள் நல்வாழ்வுத் துறையில் தொடர்ந்து மகப்பேறு காலங்களில் தாய்மார்கள் மரணங்களை குறைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்ற நாள்முதல் மகப்பேறு இறப்பு விகிதத்தை மிகப் பெரிய அளவில் தொடர்ந்து ஆண்டு தோறும் குறைந்து வருகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற 2021-22 இல் ஒரு இலட்சம் பிறப்புகளுக்கு தாய்மார்களின் இறப்பு விகிதம் 90.5 ஆக இருந்தது. 2022-23 இல் இத்துறையின் சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக 52 ஆக குறைந்தது. 2023-24 இல் 45.5 என்கின்ற அளவில் குறைந்து, ஒரு மகிழ்ச்சியான மனநிலையை தந்தது. கடந்த ஆண்டு இன்னமும் சரிந்து 39.6 ஆக குறைந்திருக்கிறது. அதேபோல் குழந்தை மரண விகிதம் 1000 பிறப்புகளுக்கு 2021-22 இல் 10.4 ஆக இருந்தது. 2022-23 இல் 10.2 ஆக குறைந்தது. 2023-24 இல் 8.2 என்கின்ற அளவில் குறைந்து மகிழ்ச்சியை தந்தது. கடந்த ஆண்டு 2024-25 இல் 7.4 ஆக குறைந்திருக்கிறது. ஆக மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு மரண விகிதங்களை மேலும் குறைத்திடும் வகையில் இத்துறை சார்பில் மகப்பேறியியல் மருத்துவர்களுக்கான பயிலரங்கங்கள், அவர்களுக்கான சிறப்பு வகுப்புகள் ஏற்கெனவே நடத்தப்பட்டது. அதேபோல் குழந்தைகள் நல மருத்துவர்களுக்கான தனியாக பயிலரங்கள் பல்வேறு அமர்வுகளின் மூலம் நடத்தப்பட்டது. தொடர்ந்து இன்றைக்கு மகப்பேறு மருத்துவத்திற்கு மிகப்பெரிய தொடர்புடைய மயக்கவியல் துறையில் 129 மருத்துவர்கள் பங்கேற்றிருக்கின்ற பயிலரங்கம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மயக்கவியல் மருத்துவர்கள், மகப்பேறு மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள் இந்த மூன்று பிரிவு மருத்துவர்களுக்கான பயிலரங்கத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைகள் அவர்களுக்கு இடையே உள்ள சந்தேகங்களை போக்கிக் கொள்ள வகையிலான பல்வேறு நிகழ்வுகளின் மூலம் நிச்சயம் அடுத்தடுத்த ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதமும், குழந்தைகளுக்கான இறப்பு விகிதமும் வெகுவாக குறைந்து பூஜ்ஜிய நிலைக்கு செல்லும் என்று கருதுகிறோம்.

மயக்க மருந்து மற்றும் அது தொடர்பான சேவைகள், மகப்பேறு இறப்பு மற்றும் அது தொடர்பான நோய்களை குறைப்பதில் மிகப் பெரிய பங்காற்றி வருகிறது. புதிய வழிகாட்டுதல்கள் மற்றும் மேம்பட்ட கண்காணிப்பு அம்சங்களினால் தற்போது மயக்க மருந்து நிபுணர்களால் மேம்பட்ட மயக்க மருந்து சேவைகளை மகப்பேறுவிற்காக வருகின்ற தாய்மார்களுக்கு அளிக்க முடியும். மயக்க மருந்தியல் துறையில் தற்போது தேவைக்கு ஏற்ப, புதிய முறைகள் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் மயக்க மருந்து நிபுணர்களுக்கு அது குறித்தான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. அப்பயிற்சி வழங்கப்படும் காரணத்தினால் அவர்களுடைய திறன்கள் மேம்படுகிறது. மகப்பேறு இறப்பு மற்றும் நோய்களை தடுப்பதில் இந்த பயிலரங்கத்தில் அவர்கள் பெறுகின்ற பயிற்சி பெரும்பங்கு வகிக்க இருக்கிறது. அந்த வகையில் இக்கருத்தரங்கம் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநரக கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளில் காலிப் பணியிடங்களை நிரப்பிடும் வகையில் இன்று பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 3 மாதங்களுக்கு முன்னாள் தமிழ்நாட்டில் இருந்த ஒட்டுமொத்த காலிப்பணியிடங்களை நிரப்பும் முயற்சியாக 2642 மருத்துவர் பணியிடங்கள் ஒரே நாளில் நிரப்பப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பணி ஆணைகள் தரப்பட்டது.

பணி ஆணைகள் தரப்படும்போது இந்தியாவில் முதன் முறையாக அவர்களுக்கு கலந்தாய்வு வைக்கப்பட்டு அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணிஆணைகள் தரப்பட்டது. இதில் தேர்வு செய்யப்பட்ட 2642 மருத்துவர்களில் முதுநிலை மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்டார மருத்துவமனைகளில் உள்ள சிறப்பு பிரிவுகளில் மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் நேற்று மகப்பேறியியல் மருத்துவர்கள் 46 பேரும், மயக்கவியல் மருத்துவர்கள் 48 பேரும், குழந்தைகள் நல மருத்துவர்கள் 62 பேரும், ஆக 154 சிறப்பு மருத்துவர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக இத்துறையில் மகப்பேறு மரண விகிதத்தையும், குழந்தைகள் இறப்பு விகிதத்தையும் குறைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை செய்து வருகிறது.

அதற்கான மருத்துவப் பணியாளர்களை அந்தந்த மாவட்டத்தில் உள்ள மாவட்ட சுகாதார நலவாழ்வு சங்கம் மூலமாக நிரப்பப்பட்டு வருகிறது. அதேபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிலான அரசு பொறுப்பேற்றபிறகு, 50 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக அறிவித்து அதற்கும் பணியாளர்களை நியமிக்கும் பணிகள் இன்னும் 10 நாட்களுக்குள் முடிவுறும் தருவாயில் உள்ளது. எனவே இப்பணிகள் முடிவடைந்தவுடன் 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இன்னொரு மகத்தான கட்டமைப்பு, ஒரே நேரத்தில் தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் 25 இடங்களில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கான பணியாளர்களை தேர்வு செய்து, இன்னும் 3 மாத காலங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.1018 கோடி செலவில் 25 இடங்களில் கட்டப்பட்டு வரும் இம்மருத்துவமனைகளும் விரைவில் திறந்து வைக்கப்படும் என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.தேரணிராஜன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சோலார் பவர் பிளான்ட் அமைத்து தருவதாக கூறி ரூ.2.11 கோடி மோசடி வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை ஜூன் 15-**

தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்தைச்சேர்ந்த பரத்குமார், என்பவர் தனியார் நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார். இந்த நிறுவனம் இந்தியா முழுவதும் சூரிய சக்தியில் மின் உற்பத்தி செய்யும் பிளான்டை நிறுவி நிர்வகித்து வருகின்றது. கடந்த 10.03.2025 அன்று பரத்குமார் காஞ்சிபுரம் பகுதியில் சோலார் பவர் பிளான்டை நிறுவுவதற்காக அஜய் ரோகன் சிவராஜன் சக்திவேல், சந்திரகாந்த் ஆகியோரை அணுகி நிலம் வாங்குதல் மற்றும் அங்கீகாரம் பெறுதல், கட்டுமானம் செய்தல் போன்ற பணிகளுக்காக பல தவணைகளாக ரூ.2.11 கோடி கொடுத்ததாகவும், பணத்தை பெற்றுக்கொண்ட மேற்கண்ட நபர்கள் ஏமாற்றி விட்டதாகவும், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டு தரும்படி மேற்படி பரத்குமார் நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். நுங்கம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.அஜய்ரோகன், 2.சிவராஜன் சக்திவேல், என்பவரை 4ந் தேதிஉ அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

இதனை தொடர்ந்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவு குற்றவாளி சந்திரகாந்த், என்பவரை கைது செய்தனர். மேற்படி வழக்கில் சம்பந்தபட்ட தலைமறைவு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரி சந்திரகாந்த் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# கொளத்தூர் பகுதியில் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை ஜூன் 15-**

சென்னை பெருநகர காவல், மேற்கு மண்டல போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு தனிப்படையினர் மற்றும் கொளத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, கடந்த மாதம் 10 ந் தேதி அன்று, கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகே மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த 1.ஐசக் ராபர்ட், 2.ரிதேஷ், ஆகிய இருவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து 7 கிராம் மெத்தம்பெட்டமைன் மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், கொளத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, கைது செய்யப்பட்ட எதிரிகள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில், மேற்படி மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரி முகமது அசாருதீன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி முகமது அசாருதீன் மீது ஏற்கனவே 2 போதைபொருள் வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி முகமது அசாருதீன், விசாரணைக்குப்பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# வட மாநில பெண்ணை கடத்திய வழக்கில் 2 பேர் கைது

**சென்னை ஜூன் 15-**

திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த கஜிஜுலி அக்தர், மற்றும் இவரது கணவர் அபில்மியா ஆகியோர் சென்னை, மேடவாக்கத்தில் வசித்து வருகின்றனர். கணவர் அபில்மியா பக்ரீத் பண்டிகைக்காக சொந்த ஊரான திரிபுரா மாநிலத்திற்கு சென்றிருப்பதால், 11ந் தேதி அன்று மாலை, கஜிஜுலி அக்தர், இவரது அண்ணன் ஜோசிம் மற்றும் ஜோசிமின் மனைவி ஜோயா அக்தர் ஆகியோருடன் நெற்குன்றத்தில் உள்ள உறவினர் தாசு அக்தர் என்பவரது வீட்டிற்கு சென்றுள்ளனர்.

அந்த குடும்பத்தினருக்கு தெரிந்த நபரான இம்ரான் என்பவர் ஜோயா அக்தர் கொடுத்த தகவலின்படி அவரது நண்பர் மற்றும் 2 பேருடன் காரில் வந்து ஜோயா அகத்ரை காரில் அழைத்துச் செல்லும்போது, கஜிஜுலி அக்தரும் வர மறுக்கவே, அவரை எதிரி இம்ரான் கையால் தாக்கி வலுக்கட்டாயமாக காரில் ஏற்றி நண்பர்களுடன் கடத்திச் சென்றுக் கொண்டிருந்தபோது, கஜிஜீலி செல்லும் வழியில் தாகம் எடுப்பதாக கூறி தண்ணீர் வேண்டும் எனக்கேட்டு, காரிலிருந்து இறங்கி சாலையில் ஒரு நபரிடம் செல்போன் வாங்கி தனது தாயாருக்கு நடந்த தகவலை செல்போன் மூலம் தெரிவித்துள்ளார். கடத்திச் சென்ற நபர்களிடமிருந்து தப்பித்து பின்னர் அண்ணன் ஜோசிம் என்பவர் மூலம் திரும்ப வந்ததாக, கஜிஜுலி அக்தரை கடத்திச் சென்ற 4 பேர் மீது நடவடிக்கை எடுக்கும்படி, கோயம்பேடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மேற்கண்ட சம்பவம் குறித்து, உயரதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதன்பேரில், தனிப்படைகள் அமைக்கப்பட்டு, கோயம்பேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்து மேற்படி குற்றத்தில் ஈடுபட்ட 1.இம்ரான் (எ) இம்தாத் பாஷா, 2.மணி (எ) மலையாண்டி, ஆகிய இருவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரிகள் இம்ரான் மற்றும் மணி (எ) மலையாண்டி ஆகியோர் மீது முன் வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகள் மற்றும் வாகனத்தை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

# டாட்டாவின் தயாரிப்பான தநைரா சேலைகளுக்கு முதன்முறையாக 40 சதவீதம் தள்ளுபடி

**கோவை, ஜூன்.15-**

டாட்டாவின் பெருமை மிகு தயாரிப்பான தநைரா, 2025-ம் நிதியாண்டில் ~30% வளர்ச்சியை எட்டியுள்ளது.மேலும் திருமண ஷாப்பிங் தற்போதுகொண்டாட்டங்களைப் போல நிகழ்வதால், வருகிற 2026-ம் நிதியாண்டையும் உற்சாகத்துடன் வரவேற்க தநைரா தயாராகி வருகிறது. தநைராவின் வளர்ச்சியானது மேல்நோக்கிய வளர்ச்சிப்பாதையில் தொடர்ந்து பரபரவென பயணிப்பதால், உருவாகியிருக்கும் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் தனது வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து கொள்ள தநைரா சிறப்பு தள்ளுபடி சலுகைகளை அறிவித்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக, முதல் முறையாக நாடு தழுவிய அளவில் சிறப்பு விற்பனையை அறிமுகம் செய்திருக்கிறது. புடவைகள், அணியத் தயாராக உள்ள ஆடைகள், தைக்கப்படாத குர்தா செட்கள் மற்றும் பண்டிகை காலங்களில் அணியும் லெஹங்காக்கள் உள்ளிட்ட பல்வேறு வகைகளிலான தயாரிப்புகளுக்கு 40% வரை தள்ளுபடியைவழங்குகிறது. பண்டிகைக் காலம் தொடங்க இருக்கையில், அதாவது சீசனுக்கும் முன்னதாகவே, இந்த விற்பனை சீசனின் அறிமுகத்தை அறிவித்திருக்கிறது. இதனால் தநைரா வழங்கும் தனித்துவமான, அசலான மற்றும் தூய துணிகளிலான ஆடைகளை தள்ளுபடி சலுகையுடன் வாடிக்கையாளர்கள் வாங்க முடியும். பண்டிகை கொண்டாட்டங்களின் போது, மற்றவர்களை ஆச்சர்யப்பட வைக்கும் அழகியலுடன் வசீகர தனது வாடிக்கையாளர்களுக்கு தநைரா வெகு முன்னதாகவே சலுகைகளை வழங்குகிறது.இந்த நிகழ்வில் பேசிய கஸ்டமர் எக்ஸ்பீரியன்ஸ் பிரிவின் தலைவர் ஜஸ்வந்த் தாமஸ் " பல்வேறு வகைகளிலான, ஏராளமான தயாரிப்புகளுக்கு இப்படியொரு மாபெரும் தள்ளுபடிகளை நாங்கள் வழங்குவது இதுவே முதல் முறை.தநைராவின் தயாரிப்புகளுக்கு40% வரை தள்ளுபடி சலுகை வழங்கப்படுகின்றன.தநைரா என்ற ப்ராண்ட்டுக்கே உரிய, அழகியலுடன் கூடிய செழுமை மற்றும் தூய்மையை வாடிக்கையாளர்கள் கொண்டாடும் அதே தருணத்தில் இந்தச் சலுகை கூடுதல் பலன்களாக இருக்கும் வகையில் வழங்குகிறோம்.

# இசுசு மோட்டார்ஸ் இந்தியா சார்பில் நாடு தழுவிய ஐ கேர் மான்ஸூன் சர்வீஸ் கேம்ப் நாளை தொடங்கி 21- ந் தேதி வரை நடக்கிறது

**கோவை , ஜூன் 15-**

இசுசு மோட்டார்ஸ் இந்தியா மிகச்சிறந்த சேவை மற்றும் உரிமையாளர் அனுபவத்தை வழங்குவதில் தனக்கிருக்கும் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் விடா முயற்சியின் அடிப்படையில் அதன் இசுசு டி மேக்ஸ் பிக் அப்ஸ் மற்றும் எஸ்யுவி வாகன தயாரிப்பு வரிசைகளுக்கு நாடு தழுவிய 'இசுசு ஐ கேர் மான்ஸூன் சர்வீஸ் கேம்ப் -ஐ நடத்தவிருக்கிறது. " இசுசு கேர்" இன் ஓர் முன் முயற்சியாக விளங்கும் இந்த மான்ஸூன் கேம்ப், ஜூன் 16 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை அனைத்து இசுசு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர் சேவை மையங்களிலும் நடைபெறும். இந்த சேவை காலத்தின் போது, வாடிக்கையாளர்கள் வாகனங்களுக்கான சிறப்பு சலுகைகள் பலன்களைப் பெற்று பயனடையலாம் . சேவை முகாமுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள் முழுமையான 37 பாய்ண்ட் இலவச சரிபார்ப்பு சோதனை , லேபர் சேவைக் கட்டணங்களில் 10% தள்ளுபடி , உதிரிபாகங்களுக்கு 5% தள்ளுபடி , ரீடெயில் ஆர்எஸ்ஏ கொள்முதல்களுக்கு 10% தள்ளுபடி ஆகிய பலன்களைப் பெறுவார்கள். இந்த மான்ஸூன் கேம்ப், இசுசு அங்கீகாரம் பெற்ற சேவை மையங்கள் அமைந்துள்ள அஹல்யாநகர், அகமதாபாத், அம்பிகாபூர், பெங்களூரு, பரேலி, பார்மர், பதிண்டா, பாண்துப், போபால், புவனேஸ்வர், பிகானீர், பிலாஸ்பூர், கோழிக்கோடு, சத்ரபதி சம்பாஜி நகர், சென்னை, கோயம்புத்தூர், திப்ருகர், திமாபூர், துர்காபூர், எர்ணாகுளம், காந்திதாம், கோரக்பூர், குர்காவுன், குவஹாத்தி ஹிசார், ஹவுரா, ஹுப்பள்ளி, ஹைதராபாத், இந்தூர், இட்டாநகர், ஜெய்கோன், ஜெய்ப்பூர், ஜலந்தர், ஜம்மு, ஜோத்பூர், கடப்பா, கர்னல், கம்மம், கோலாப்பூர், கொல்கத்தா, கோட்டயம், கர்னூல், லே, லக்னோ, லூதியானா, மதுரை, மண்டி, மங்களூரு, மெஹ்சானா, மொஹாலி, மைசூர், நாக்பூர், நாசிக், நெல்லூர், நெருல், நியூ டெல்லி நோய்டா,ஆகிய அனைத்து நகரங்களிலும் நடைபெறும்.

## 27 ஆண்டுகளுக்குப் பிறகு

# ஐ.சி.சி. சாம்பியன் பட்டம் வென்ற தென் ஆப்பிரிக்கா




**லண்டன், ஜூன் 15-**

27 ஆண்டுகளுக்குப்பின் ஐ.சி.சி. சாம்பியன் பட்டம் வென்ற தென் ஆப்பிரிக்கா

**லார்ட்ஸ் மைதானம்...**

உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் இறுதிப்போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இதில், ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா மோதின. இதில், முதல் இன்னிங்சில் ஆஸ்திரேலியா 212 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதையடுத்து களமிறங்கிய தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 138 ரன்களில் ஆல் அவுட் ஆனது.

**207 ரன்களில் அவுட்...**

இதையடுத்து களமிறங்கிய ஆஸ்திரேலியா 2வது இன்னிங்சில் 207 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் தென் ஆப்பிரிக்காவுக்கு 282 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து 282 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென் ஆப்பிரிக்கா 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு வெற்றி இலக்கை எட்டியது. இதன் மூலம் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டத்தை தென் ஆப்பிரிக்கா வென்றது.

**27 ஆண்டுகளுக்கு பின்...**

இந்நிலையில், 27 ஆண்டுகளுக்குப்பின் ஐ.சி.சி. சாம்பியன் பட்டத்தை தென் ஆப்பிரிக்கா தற்போது வென்றுள்ளது. கடைசியாக 1998ம் ஆண்டு நவம்பர் 1ம் தேதி நடைபெற்ற ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை தென் ஆப்பிரிக்கா வென்றது. அதன்பின்னர், ஐ.சி.சி. கோப்பை எதையும் தென் ஆப்பிரிக்கா வெல்லவில்லை. தற்போது 27 ஆண்டுகளுக்குப்பின் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் கோப்பையை தென் ஆப்பிரிக்கா வென்றுள்ளது. ஐ.சி.சி. சாம்பியன் பட்டம் வென்ற தென் ஆப்பிரிக்காவுக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

**4-வது நாள் ஆட்டம்...**

முன்னதாக நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் தென்ஆப்பிரிக்கா அணி 2-வது இன்னிங்சில் 56 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 213 ரன்கள் சேர்த்தது. மார்க்ரம் 102 ரன்களுடனும் ( 159 பந்து, 11 பவுண்டரி), தசைப்பிடிப்பை சமாளித்து சாதுர்யமாக ஆடிய கேப்டன் பவுமா 65 ரன்களுடனும் (121 பந்து, 5 பவுண்டரி) அவுட் ஆகாமல் இருந்தனர். தென்ஆப்பிரிக்காவின் வெற்றிக்கு இன்னும் 69 ரன்களே தேவைப்பட்ட நிலையில், நேற்று 4-வது நாள் ஆட்டம் தொடங்கியது. பவுமா 66 ரன்னிலும், ஸ்டப்ஸ் 6 ரன்னிலும், ஆட்டமிழந்தனர். சிறப்பாக விளையாடி வந்த மார்க்ரம், 136 ரன்கள் எடுத்து ஹேசல்வுட் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அத்துடன், தனது பணியை கச்சிதமாக செய்து முடித்தார்.

இறுதியில் தென் ஆப்பிரிக்க அணி, 83.4ஓவர்களில் இலக்கை கடந்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன், முதல் முறையாக ஐசிசி டெஸ்ட் சாம்பியன் ஆனது.

## இந்தியாவுக்கு எதிரான டி20 தொடர்.:

# இங்கி., மகளிர் அணி அறிவிப்பு



**லண்டன், ஜூன் 15-**

இந்தியாவுக்கு எதிரான டி20 தொடருக்கான இங்கிலாந்து மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**வரும் 28-ம் தேதி...**

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டி20 மறும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 28ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடரில் முதலில் டி20 போட்டிகளும், அதனை தொடர்ந்து ஒருநாள் போட்டிகளும் நடைபெறுகின்றன. இந்நிலையில், இந்தியாவுக்கு எதிரான டி20 தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு நாட் ஸ்கிவர் பிரண்ட் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

**இங்கிலாந்து அணி:**

எம் ஆர்லாட், டாமி பியூமண்ட், லாரன் பெல், ஆலிஸ் கேப்சி, சார்லி டீன், சோபியா டங்க்லி, சோபி எக்லெஸ்டோன், லாரன் பைலர், ஆமி ஜோன்ஸ், நாட் ஸ்கைவர்-பிரண்ட் (கேப்டன்), பைஜ் ஸ் கோல்பீல்ட், லின்சி ஸ்மித், டேனி வயட்-ஹாட்ஜ், இஸ்ஸி வோங்.

## 10 டெஸ்ட் போட்டிகளில் 9 வெற்றி - ஒரு டிரா:

# ஆதிக்கம் செலுத்தும் பவுமா



**லண்டன், ஜூன் 15-**

டெஸ்ட் போட்டிகளில் தென்னாப்பிரிக்க அணியின் கேப்டன் டெம்பா பவுமா தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார்.

**சாம்பியன் பட்டம்...**

ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையே லார்ட்ஸ் திடலில் நடைபெற்று வந்த உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி நேற்றுடன் நிறைவு பெற்றது. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி, டெம்பா பவுமா தலைமையிலான தென்னாப்பிரிக்க அணி சாம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம், 27 ஆண்டுகளில் முதல் முறையாக தென்னாப்பிரிக்க அணி ஐசிசி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

**பலரும் கேப்டனாக...**

பல ஆண்டுகளாக ஐசிசி கோப்பையை வெல்ல முடியாமல் தென்னாப்பிரிக்க அணி பல ஏமாற்றங்களை சந்தித்து வந்த நிலையில், அதற்கு முற்று புள்ளி வைத்துள்ளார் கேப்டன் டெம்பா பவுமா. தென்னாப்பிரிக்க அணிக்கு பலரும் கேப்டனாக செயல்பட்டுள்ளபோதிலும், கோப்பையை வெல்லும் கனவை பவுமா தலைமையிலான தென்னாப்பிரிக்க அணி நனவாக்கியுள்ளது.

**9 வெற்றிகள் - 1 டிரா...**

இந்த வெற்றியின் மூலம், கேப்டன் டெம்பா பவுமா டெஸ்ட் போட்டிகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டதிலிருந்து பவுமா 10 டெஸ்ட் போட்டிகளில் அணியை வழிநடத்தியுள்ளார். அதில் 9 வெற்றிகள் மற்றும் ஒரு டிரா அடங்கும். இதன் மூலம், டெஸ்ட் போட்டிகளில் தோல்வியே காணாத கேப்டனாக அவர் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்.

## ஆட்ட நாயகன் மார்க்ரம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இன்னிங்ஸில் தென்னாப்பிரிக்க அணி 138 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. முதல் இன்னிங்ஸில் அய்டன் மார்க்ரம் 6 பந்துகளில் 0 ரன்கள் எடுத்து ஏமாற்றமளித்தார். முதல் இன்னிங்ஸில் டக் அவுட்டாகி ஏமாற்றமளித்த மார்க்ரம், இரண்டாவது இன்னிங்ஸில் சதம் விளாசி அணியின் வெற்றிக்கு வித்திட்டார். சிறப்பாக விளையாடிய அவர் 207 பந்துகளில் 136 ரன்கள் எடுத்தார். அதில் 14 பவுண்டரிகள் அடங்கும்.

கடைசி வரை களத்தில் இருந்து போட்டியை முடித்துக் கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வெற்றி பெறுவதற்கு 6 ரன்கள் தேவை என்ற நிலையில், ஜோஸ் ஹேசில்வுட் பந்துவீச்சில் டிராவிஸ் ஹெட்டிடம் கேட்ச் ஆகி மார்க்ரம் ஆட்டமிழந்தார். சிறப்பாக விளையாடி அணியின் வெற்றிக்கு வித்திட்ட மார்க்ரமுக்கு ஆஸ்திரேலிய வீரர்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர். மார்க்ரம் ஆட்டமிழந்து வெளியேறியபோது, லார்ட்ஸ் திடலில் உள்ள ரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று கைத்தட்டி அவருக்கு பாராட்டு தெரிவித்தனர். சிறப்பாக விளையாடி அணியின் வெற்றிக்கு உதவிய மார்க்ரமுக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஸ்டீவ் ஸ்மித்திற்கு காயம்




**லண்டன், ஜூன் 15-**

கையில் ஏற்பட்ட காயம் தொடர்பாக ஸ்மித் மருத்துவமனைக்கு சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**282 ரன்கள் இலக்கு...**


ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா இடையே உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில், 282 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்கா விளையாடி வருகிறது. தற்போதைய நிலவரப்படி, தென் ஆப்பிரிக்கா 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 120 ரன்கள் எடுத்துள்ளது. தென் ஆப்பிக்கா வெற்றிபெற இன்னும் 162 ரன்கள் எடுக்க வேண்டும். ஆஸ்திரேலியா வெற்றிபெற இன்னும் 8 விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டும்.

**வலது கையில் காயம்...**

இந்நிலையில், இப்போட்டியின்போது ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித்திற்கு கையில் காயம் ஏற்பட்டது. 19.2 ஓவரில் ஸ்டார்க் வீசிய பந்தை தென் ஆப்பிக்க கேப்டன் பவுமா விளாச முற்பட்டார். அப்போது, அந்த பந்து ஸ்லிப்பில் கேட்ச் நோக்கி சென்றது. ஸ்லிப்பாக ஸ்டீவ் ஸ்மித் செயல்பட்ட நிலையில் அவர் அந்த கேட்சை பிடிக்க முயன்றார். ஆனால், பந்து ஸ்மித்தின் வலது கையில் வேகமாக பட்டு கீழே விழுந்தது. இதில், ஸ்மித்தின் வலது கையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து, அவர் மைதானத்தில் இருந்து வெளியேறினார்.

அவருக்கு பதிலாக மாற்று வீரராக சாம் கொன்ஸ்டாஸ் களத்திற்கு வந்துள்ளார். கையில் ஏற்பட்ட காயம் தொடர்பாக ஸ்மித் மருத்துவமனைக்கு சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## கெயில் சாதனை முறியடிப்பு




அமெரிக்காவில் மேஜர் லீக் டி20 கிரிக்கெட்டின் 3வது சீசன் நடந்து வருகிறது. இதன் லீக் போட்டி ஒன்றில் சான் பிரான்சிஸ்கோ அணியும், வாஷிங்டன் அணியும் மோதின. முதலில் ஆடிய சான் பிராசின்ஸ்கோ அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 269 ரன்கள் குவித்தது. அடுத்து ஆடிய வாஷிங்டன் அணி 146 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன் மூலம் சான் பிரான்சிஸ்கோ அணி 123 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பேட்டிங்கில் அசத்திய சான் பிரான்சிஸ்கோ அணியின் நியூசிலாந்து வீரர் பின் ஆலன் 51 பந்தில், 19 சிக்சர், 5 பவுண்டரி உள்பட 151 ரன் குவித்து வெற்றிக்கு வழி வகுத்தார்.இந்நிலையில், டி 20 அரங்கில், ஒரு இன்னிங்சில் அதிக சிக்சர் விளாசிய வீரர்கள் வரிசையில் பின் ஆலன் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். வெஸ்ட் இண்டீசின் கிறிஸ் கெய்ல், எஸ்டோனியாவின் சாஹில் சவுகான் ஆகியோர் தலா 18 சிக்சர் அடித்து இரண்டாவது இடத்தில் உள்ளனர்.

## தங்கம் வென்றார் சுருச்சி



3-வது உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ஜெர்மனியின் முனீச் நகரில் வரும் 14-ம் தேதி வரை நடக்கிறது. இதில் ஒலிம்பிக், உலக சாம்பியன்கள் உள்பட 78 நாடுகளைச் சேர்ந்த 695 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். இந்திய அணியில் மொத்தம் 36 வீரர், வீராங்கனைகள் அங்கம் வகிக்கிறார்கள். தமிழகத்தைப் பூர்விகமாக கொண்ட இளவேனில் வாலறிவன் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் வெண்கலம் வென்றார். 25 மீட்டர் பிஸ்டல் பெண்கள் பிரிவின் இறுதிப்போட்டியில் மனு பாக்கர் 6வது இடம்பிடித்து பதக்கம் பெறும் வாய்ப்பை இழந்தார்.

பெண்களுக்கான 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் பிரிவில் நடைபெற்ற போட்டியில் இந்திய வீராங்கனை சிப்ட் கவுர் சம்ரா வெண்கலப் பதக்கம் வென்று அசத்தினார். இந்நிலையில், பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்திய வீராங்கனை சுருச்சி இந்தர் சிங் தங்கப் பதக்கம் கைப்பற்றினார். தொடர்ந்து 3-வது முறையாக உலக கோப்பை துப்பாக்கிச் சுடுதலில் தங்கம் வென்றுள்ளார் சுருச்சி. இதன்மூலம் ஒட்டுமொத்தமாக நடப்பு தொடரில் இந்திய அணி ஒரு தங்கம், 2 வெண்கலம் என 3 பதக்கங்கள் வென்றுள்ளது.

## வக்பு திருத்த சட்டத்திற்கு எதிராக

# திருச்சியில் வி.சி.க. பிரம்மாண்ட பேரணி

**திருச்சி, ஜூன் 15-**

வக்பு திருத்த சட்டத்திற்கு எதிராக திருச்சியில் வி.சி.க. சார்பில் பிரம்மாண்ட பேரணி நடைபெற்றது.

வக்பு திருத்தச் சட்டத்திற்கு எதிராக திருச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் பிரம்மாண்ட எழுச்சிப் பேரணி நடைபெற்றது. திருச்சி டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் தொடங்கி, சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு பேரணி நடைபெற்றது. இதனை முன்னிட்டு, வழிநெடுகிலும் கட்சிக் கொடிகளும், பிரம்மாண்ட பேனர்களும் அமைக்கப்பட்டிருந்தன.

முன்னதாக பேரணி தொடர்பாக திருமாவளவன் நடத்திய ஆலோசனை கூட்டத்தில், வி.சி.க. துணைப் பொதுச் செயலாளரும், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.எஸ் பாலாஜி உள்ளிட்ட கட்சி மேலிட பொறுப்பாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர். பேரணியின்போது வி.சி.க. தலைவர் திருமாவளவன் திறந்த வாகனத்தின் மீது பயணித்தார். அப்போது அவர் தொண்டர்களுடன் செல்பி எடுத்துக் கொண்டார். வி.சி.க துணைப் பொதுச் செயலாளர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, வன்னியரசு உள்ளிட்டோர் களப்பணியில் ஈடுபட்டனர்.

## ஈரோடு அருகே அதிர்ச்சி சம்பவம்:

# திடீரென தீப்பற்றி எரிந்த கார்

**ஈரோடு, ஜூன் 15-**

ஈரோடு அருகே கார் தீப்பற்றி ஏரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரோடு மாவட்டம் பவானி பழனியாண்டவர் கோவில் வீதி பகுதியை சேர்ந்தவர் புன்னியக்கொடி. இவர் ஒரு ஆம்னி காரை ஓட்டி வந்தார். இந்த நிலையில் மேட்டூர் பிரதான சாலையில் காரை நிறுத்திவிட்டு வீட்டிற்கு சென்றுள்ளார். இதனையடுத்து மதியம் சுமார் 3 மணியளவில் காரில் தீ ஏற்பட்டது. இது குறித்து உடனடியாக பவானி தீயணைப்புத் துறை யினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து தகவலறிந்த அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். சுமார் அரை மணி நேரம் போராடி தீயணைப்புத்துறையினர் தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

கார் திடீரென தீப்பிடித்த எரிந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து தகவலறிந்த போலீசார் விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை:

# தஞ்சையில் 2 நாட்களுக்கு டிரோன்கள் பறக்க தடை



**தஞ்சாவூர், ஜூன் 15-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரவுள்ளதால் அங்கு 2 நாட்கள் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் பிரியங்காபங்கஜம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது., தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தருகிறார். இதனை முன்னிட்டு பாதுகாப்பு காரணம் கருதி இன்றும் (ஞாயிற்றுகிழமை), நாளையும் (திங்கள்கிழமை) நள்ளிரவு 12 மணி வரை 2 நாட்கள் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்படுகிறது.

எனவே, தடையை மீறி டிரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விமான விபத்தின் போது நடந்தது என்ன?

# கறுப்பு பெட்டி ஆய்வுக்கு பிறகே தெரிய வரும்: மத்திய அமைச்சர்

**புதுடில்லி, ஜூன் 15-**

அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்பு பெட்டி கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதனை ஆய்வுக்கு பிறகு நடந்தது என்ன என்பது குறித்து தெரிய வரும் என மத்திய அமைச்சர் ராம் மோகன் நாயுடு கூறியுள்ளார்.

டில்லியில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: கடந்த இரண்டு நாட்கள், விமான போக்குவரத்து துறை அமைச்சகத்துக்கு மிகவும் கடினமான நாளாக இருந்தது. அகமதாபாத்தில் நடந்த விபத்து ஒட்டு மொத்த தேசத்தையும் உலுக்கி உள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவிக்கிறேன். எனது தந்தையும் சாலை விபத்தில் இறந்தவர் தான். இதனால், விமான விபத்தில் இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களையும், உணர்வுகளையும் என்னால் புரிந்து கொள்ள முடியும்.

விபத்து குறித்து அறிந்ததும் எங்களுக்கு அதிர்ச்சி தான் ஏற்பட்டது. முதலில் நாங்கள் நம்பவில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்று, தேவையான உதவிகளை செய்தேன். நாங்கள் அங்கு சென்ற போது, குஜராத் அரசு ஊழியர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு இருந்தனர். விமான விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்காகவே என அமைக்கப்பட்ட விமான விபத்து புலனாய்வு பிரிவினர், சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்றனர். கறுப்பு பெட்டி (நேற்று முன்தினம்) கண்டுபிடிக்கப்பட்டது முக்கியமான விஷயம். இதனை ஆய்வு செய்யும் போது விபத்து ஏற்படுவதற்கு முன்னர் மற்றும் விபத்து நடந்த போது என்ன நடந்தது என்பது குறித்து தெளிவாக தெரியும். விமான விபத்துக்கான புலனாய்வு பிரிவினர் விசாரணை முடித்த உடன் கிடைக்கும் அறிக்கைக்காக காத்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு 7,400-ஆக உயர்வு: ஒரேநாளில் 9 பேர் பலி

**புதுடில்லி, ஜூன 15-**

இந்தியாவில் கொரோனா தொற்று மெல்ல மெல்ல அதிகரித்து வரும் நிலையில், தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை 7,400 எட்டியுள்ளது.

நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று பரவி வருகிறது. குறிப்பாக தலைநகர் டில்லி, மஹாராஷ்டிரா, கேரளா ஆகிய மாநிலங்களில் தினமும் தொற்று பாதித்தோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்த நிலையில், நாடு முழுவதும் தற்போது வரையில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 7,400 ஆக உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 269 பேருக்கு புதிதாக தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக கர்நாடகாவில் ஒரே நாளில் 132 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். குஜராத்தில் 79 பேரும், கேரளாவில் 54 பேரும், மத்திய பிரதேசத்தில் 20 பேரும், தமிழகத்தில் 12 பேரும்சிக்கிமில் 11 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மஹாராஷ்டிராவில் 4 பேரும், கேரளாவில் 3 பேரும், தமிழகம் மற்றும் ராஜஸ்தானில் தலா ஒருவரும் இந்த நோய் தொற்றுக்கு பலியாகியுள்ளனர். கடந்த ஜன.,1ம் தேதி முதல் தற்போது வரை, ஒட்டுமொத்தமாக 87 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தொற்று பரவி வருவதால், வயதானவர்கள் மற்றும் இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள் பொது இடங்களுக்கு செல்லும் போது மாஸ்க் அணிந்து செல்லுமாறு சுகாதாரத்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# முல்லைப் பெரியாறு அணையில் இருந்து 1,600 கனஅடி நீர் திறப்பு

**தேனி, ஜூன் 15-**

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து 1600 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை எதிரொலியாக, முல்லைப் பெரியாறு அணையில் இருந்து 1600 கனஅடி நீர் திறந்து விடப்பட்டு உள்ளது. முல்லைப் பெரியாறு அணைப்பகுதியில் 41 மில்லி மீட்டரும், தேக்கடி பகுதியில் 16.4 மில்லி மீட்டரும் என மழை பதிவாகியுள்ளது.

முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து 1,190 கன அடியாக அதிகரித்தது. இதனால், அணையில் இருந்து 1600 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

இதனிடையே, ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் சூழலில், பொதுமக்கள் யாரும் குளிக்கவோ, கால்நடைகளை குளிக்க வைக்கவோ ஆற்றில் இறங்கக் கூடாது என மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# நடப்பு கல்வியாண்டுக்கான கால அட்டவணை வெளியீடு

## மொத்தம் 210 வேலை நாட்கள்

**சென்னை, ஜூன் 15-**

நடப்பு கல்வியாண்டுக்கான கால அட்டவணையை பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது. மொத்தம் 210 நாட்கள் வேலை நாட்களாகவும், அனைத்து சனிக்கிழமையும் விடுமுறை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் அந்த ஆண்டுக்கான கால அட்டவணையை பள்ளிக் கல்வித் துறை வெளியிடும். அதாவது அந்த ஆண்டில் எவ்வளவு நாள் வேலை நாட்கள்?, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இறுதி தேர்வுகள் எப்போது நடத்தப்படும்? என்பது போன்ற தகவல்கள் இடம்பெற்று இருக்கும்.

அந்த வகையில் நடப்பு கல்வியாண்டுக்கான (2025-26) நாட்காட்டியை பள்ளி கல்வித்துறை வெளியிட்டது. அதில் மொத்தம் 210 வேலை நாட்களாக சொல்லப்பட்டு இருக்கிறது. கல்வியாண்டின் இறுதி வேலை நாள் அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் 24- ந் தேதி ஆகும்.தேர்வுகளை பொறுத்தவரையில், முதல் இடை பருவத் தேர்வு ஜூலை 16-ம் தேதி தொடங்க உள்ளது. காலாண்டு தேர்வு செப்டம்பர் 18-ம் தேதி தொடங்கி 26-ம் தேதி வரையில் நடக்கிறது. காலாண்டு விடுமுறை 9 நாட்கள் விடப்பட்டு அக்டோபர் 6-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

அதேபோல் அரையாண்டு தேர்வு டிசம்பர் 15 முதல் 23-ம் தேதி வரை நடைபெற உள்ளது. அரையாண்டு விடுமுறை 12 நாட்கள் விடப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி 5-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படுகிறது. ஆண்டு இறுதி தேர்வு ஏப்ரல் 10-ம் தேதி தொடங்கி 24-ம் தேதியுடன் முடிவடைந்து அதற்கு மறுநாளில் இருந்து கோடை விடுமுறை தொடங்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது தவிர தீபாவளிக்கு 3 நாட்கள், பொங்கல் பண்டிகைக்கு 5 நாட்கள், கல்வியாண்டின் அனைத்து சனிக்கிழமைகளிலும் விடுமுறை என அறிவிக்கப்பட்டுள்ளது.வழக்கமாக எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்-1, பிளஸ்-2 பொதுத் தேர்வு எப்போது தொடங்கும் என்ற தகவலும் கால அட்டவணையில் இடம்பெறும்.

கடந்த ஆண்டில் இதுகுறித்து தெரிவிக்கப்படாத நிலையில் இந்த ஆண்டும் அதுகுறித்து எந்த தகவலும் இல்லை. பள்ளிகள் இந்த மாதிரி கல்வி அட்டவணையை பயன்படுத்தி பள்ளிகளுக்கு ஏற்றவாறு கால அட்டவணையை தயாரித்து கொள்ளலாம் என்றும், கால அட்டவணை குறித்த கருத்துகள் ஆலோசனைகளை msectndse@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் என்றும் பள்ளி கல்வித் துறை அறிவித்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தேர்வுநிலை பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனைகள் குறித்த விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

## தேனி மாவட்டத்தில் அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு சீருடைகளை கலெக்டர் ரஞ்ஜீத் வழங்கினார்



**தேனி, ஜூன் 15-**

தேனிமாவட்டம், ஆ ண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், திருமலாபுரம் ஊராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில், அங்கன்வாடி மையத்தில் முன்பருவக்கல்வி குழந்தைகளுக்கு வண்ண சீருடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், அவர்கள் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன் அவர்கள் முன்னிலையில் வழங்கினார்கள்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு நமது மாவட்டத்தில் செயல்படும் 1065 குழந்தை மையங்கள் செயல்பட்டு வருகின்றது.

இம்மையங்களில் குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி கற்பிக்கப்படுவதுடன், குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு, எடைக்குறைவு இருப்பின் அதனை சரிசெய்வதற்காக சத்துணவு, சத்து மாவு உள்ளிட்ட உணவுப்பொருட்கள் மற்றும் முன்பருவக் கல்வி போன்றவைகள் வழங்கப்படுகிறது.

அங்கன்வாடி மைய குழந்தைகளிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கவும், அவர்கள் அனைவரும் சமமாக கருதப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் வண்ண சீருடைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இன்றைய தினம் திருமலாபுரம் அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சீருடைகளை வழங்கினார்.

முன்னதாக, 5 வயது முடிவுற்ற குழந்தைக்கு முன்பருவ கல்வி நிறைவுபெற்றதற்கான சான்றிதழினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும், தேனி மாவட்டத்திலுள்ள 1065 அங்கன்வாடி மையங்களில் பயிலும் 18,005 குழந்தைகளுக்கு தலா 2 சீருடைகள் வீதம் மொத்தம் 36,010 வண்ண சீருடைகளும் மற்றும் ஆடிபாடி விளையாடு பாப்பா புத்தகமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம்) திருமதி ரேவதி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் செல்விசித்ரா, மேற்பார்வையாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மின்னொளி அலங்காரத்துடன் விடிய விடிய புனித அந்தோணியார் ஆலய தேர் திருவிழா



**கமுதி, ஜூன் 15-**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி-மெயின்பஜாரில் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த பதுவை புனித அந்தோணியார் ஆலயம் உள்ளது. இங்கு வருடா வருடம் ஜூன் மாதம் தேர் திருவிழா நடைபெறுவது வழக்கம்.இந்த வருட ஆலயத் திருவிழா கடந்த 2-ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. தினமும் திருப்பலி நிகழ்வுகள் நடைபெற்று பிரசாதம் வழங்கப்பட்டு வந்தது.

இதில் அந்தோணியார் தெரு மற்றும் சவேரியார் தெரு பகுதியில் உள்ள கிறிஸ்துவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவின் முக்கிய நாளான நேற்று முன்தினம் இரவு தேர்த்திருவிழா நடைபெற்றது.

முன்னதாக விசேஷ திருப்பலி நடைபெற்றது. இதற்கு கமுதி முன்னாள் பங்கு தந்தை ரெய்மன்ட்ஜோசப் தலைமை தாங்கி நடத்தினார். கமுதி பங்குத் தந்தை அம்புரோஸ்லூயிஸ் மற்றும் கே.எம்.கோட்டை அருட்பணி சார்லஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து பிரத்யோகமாக செய்ய நான்கு தேர்களில் மின்னொளி மற்றும் மலர் மாலை அலங்காரத்துடன் புனித அந்தோணியார், புனித செபஸ்தியார், புனித மிக்கேல் சம்மனசு, புனித சவேரியார் உள்ளிட்ட நான்கு சிலைகளும் வைக்கப்பட்டு, ஆலயத்தில் இருந்து முக்கிய வீதிகளான நாடார் பஜார், முஸ்லீம் பஜார், செட்டியார் பஜார் வழியாக ட்ரம்செட் மற்றும் மேளதாளம், வான வேடிக்கைகளோடு இந்த தேர்பவனி நடைபெற்றது.

இந்த தேர் பவனியில், வழிநெடுகிலும் அனைத்து மதத்தினரும் மாலை, பொரிகடலை, உப்பு மற்றும் மெழுகுவர்த்தி படைத்து அந்தோணியாரை வணங்கினர். பிரசாதமாக உப்பு கலந்த பொரிகடலை வழங்கப்பட்டது. மேலும் சிறு குழந்தைகளை புனித அந்தோணியாரின் பாதத்தில் வைத்து ஆசி பெற்றனர். இந்தத் திருவிழாவில் அந்தோணியார் தெரு, சவேரியார் தெரு மற்றும் சென்னை, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வசித்து வரும் கமுதியை சேர்ந்த ஏராளமான கிறிஸ்துவர்கள் உட்பட 2000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். விடிய விடிய நடைபெற்ற இந்த தேர்பவனி அதிகாலை ஆலயத்தை வந்தடைந்தது. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பரத உறவின் முறையினர் செய்திருந்தனர்.

## டி.கல்லுப்பட்டி அருகே தாக்குதல் நடந்த சத்திரப்பட்டி காவல் நிலையத்தை பார்க்கச் சென்ற முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கைது



**திருமங்கலம். ஜூன் 15-**

மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டி அருகே தாக்குதலுக்கு இலக்கான வி.சத்திரப்பட்டி காவல் நிலையத்தை பார்வையிடச் சென்ற முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் மற்றும் அவருடன் வந்த கட்சி நிர்வாகிகளை போலீசார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். காவல் துறையினரின் இந்த செயலுக்கு கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பேரையூர் தாலுகா டி.கல்லுப்பட்டி அருகே உள்ள வி.சத்திரப்பட்டியில் காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு நேற்று முன்தினம் இரவு தலைமை காவலர் பால்பாண்டி என்பவர் பணியில் இருந்துள்ளார். இதனிடையே கடந்த சில மாதங்களுக்கு முன்பு வாலிபர் ஒருவர் அங்குள்ள கண்மாய் கரையில் மர்மமான முறையில் தலை துண்டிக்கப்பட்டு பிணமாக கிடந்தார்.இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான பிரபாகரன் வீட்டுக்கு போலீசார் விசாரணை நடத்த சென்றனர்.அப்போது அவர் வீட்டில் இல்லாததால் அவரது தந்தையை போலீசார் விசாரணைக்காக காவல் நிலையத்துக்கு வருமாறு கூறிச் சென்றனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த பிரபாகரன் நேற்று முன்தினம் இரவு மது போதையில் வி.சத்திரப்பட்டி காவல் நிலையத்திற்குச் சென்று அங்கு பணியில் இருந்த தலைமை காவலர் பால்பாண்டியை மிரட்டியுள்ளார். இதையடுத்து அந்த காவலர் தனி அறைக்கு தப்பிச் சென்று உட்புறமாக பூட்டிக் கொண்டார். இதனால் ஆத்திரமடைந்த பிரபாகரன் தனது கூட்டாளியுடன் சேர்ந்து காவல் நிலையத்தில் உள்ள பொருட்கள் அனைத்தையும் அடித்தும், உடைத்தும் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

காவல் நிலையம் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து தகவலறிந்த முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயக்குமார் கட்சி நிர்வாகிகளுடன் வி.சத்திரப்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று பார்வையிட முயன்றார். அப்போது போலீசார் அவரை செல்லவிடாமல் முத்துலிங்கா புரத்தில் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் மற்றும் உடனிருந்த கட்சி நிர்வாகிகள் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் போலீசார் அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தியும் போராட்டத்தை அவர் கைவிட மறுத்து விட்டார்.

இதையடுத்து போலீசார் முன்னாள் அமைச்சர் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் மற்றும் அவருடன் வந்த கட்சி நிர்வாகிகளை போலீசார் கைது செய்து டி.கல்லுப்பட்டி யிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். இது பற்றி தகவலறிந்த முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு மற்றும் முன்னாள் எம்.எல்.ஏ க்கள் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமாரை நேரில் சந்தித்து நிகழ்வுகள் குறித்து பேசினார்கள்.

இந்த நிகழ்வு தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்: மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள வி.சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் நேற்று புகுந்த மர்மநபர்கள், காவல் நிலையத்தைத் தாக்கி, சூறையாடியதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

இதனையடுத்து, எனது அறிவுறுத்தலின்படி, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் அவர்கள் அந்த காவல் நிலையத்தை பார்வையிடச் சென்றபோது காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளதற்கு எனது கடும் கண்டனம். இந்த ஆட்சியில் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. மக்களைக் காக்க வேண்டிய காவல்துறைக்கும் பாதுகாப்பு இல்லை.

தற்போது உச்சத்தின் உச்சமாக காவல் நிலையத்திற்கும் பாதுகாப்பு இல்லை. எனவே வி.சத்திரப்பட்டி காவல் நிலையத் தாக்குதலில் ஈடுபட்டோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## இளம் மாணவ அறிவியாளர் திட்ட பயிற்சி பட்டறை




**ஒட்டன்சத்திரம், ஜூன் 15-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அக்ஷயா அகடாமி சி.பி.எஸ்.இ. பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் பிரகதீஸ்வரர் கிருஷ்ணா தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பமாநில மன்றம் மற்றும் காந்தி கிராம பஞ்சாயத்து பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய இளம் அறிவியாளர் திட்ட பயிற்சி பட்டறையில் பங்கேற்று ஏ1 தொழில்நுட்ப உதவியுடன் புதிய ரோபட்டினை உருவாக்கி இளம் அறிவியாளர் பட்டத்தை பெற்று அடுத்த கட்ட நிலைக்கு தேர்வாகி உள்ளார். மாணவனை பள்ளியின் செயலாளர் பட்டாபிராமன், பள்ளி முதல்வர் சௌம்யா பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கினர்.

## ராமநாதபுரத்தில் தேசிய லோக் அதாலத் நிகழ்ச்சியில் 1,062 வழக்குகளுக்கு தீர்வு




**ராமநாதபுரம், ஜூன் 15-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான லோக் அதாலத் நிகழ்ச்சியில் ஆயிரத்து 62 வழக்குகளில் ரூ.5 1/4 கோடி மதிப்பில் சமரசம் மூலம் தீர்வு காணப்பட்டன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உத்தரவின்படி தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் நிகழ்ச்சி நடைப்பெற்றது.


நிகழ்ச்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதி மெகபூப் அலிகான். தலைமை வகித்தார், விரைவு மகிளா நீதிமன்ற நீதிபதி கவிதா, தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி மோகன்ராம், சார்பு நீதிபதி அகிலா தேவி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் நீதிபதி சரவணபாபு, நீதித்துறை நடுவர் எண் -1 நீதிபதி நிலவேஸ்வரன், மாவட்ட உரிமையியல் நீதிபதி கேத்திரினி ஜெபா சகுந்தலா, வக்கீல் சங்க தலைவர் அன்புச் செழியன் மற்றும் வக்கீல்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் ராமநாதபுரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பாக ராமநாதபுரம் ஒருங்கிணைந்த கோர்ட்டு வளாகம், பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி, கடலாடி, திருவாடாணை, ராமேசுவரம் ஆகிய இடங்களில் 10 அமர்வுகள் ஏற்படுத்தப்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து கோர்ட்டுகளிலும் நிலுவையில் உள்ள சிவில், கிரிமினல், வாகன விபத்து, காசோலை சம்மந்தப்பட்ட வழக்குகள், வங்கி வாராக்கடன்கள் மற்றும் சிறு வழக்குகள் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டன.

இந்த சமரசம் மூலம் மொத்தம் 5ஆயிரத்து 23 வழக்குகள் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு அதில் ஆயிரத்து 62 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு ரூ.5 கோடியே 33 லட்சத்து 9 ஆயிரத்து 189 நிவாரண தொகை வழங்கப்பட்டது.

விழாவிற்கான ஏற்பாடுகளை ராமநாதபுரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு ஊழியர்கள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

## பத்ரகாளியம்மன் கோவில் திருவிழா



**நத்தம், ஜூன் 15-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் காமராஜ் நகர் பத்ரகாளியம்மன் கோவில் திருவிழா நடந்தது.இதில் கடந்த 10-ம் தேதி அழகர்மலை தீர்த்தம் அழைத்து வரப்பட்டு காப்பு கட்டுதலுடன் விழா தொடங்கியது. இதில் தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது. பின்னர் அம்மன்குளத்தில் இருந்து கரகம் அழைத்து வரும் நிகழ்ச்சியும் நடந்தது.

தொடர்ந்து பக்தர்கள் பால்குடம், அக்னிச்சட்டி , முளைப்பாரி எடுத்து தங்களது நேர்த்திகடன்களை செலுத்தினர். பின்னர் கரகம் பூஞ்சோலை செல்லும் நிகழ்ச்சி நடந்தது. விழாவில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை காமராஜ் நகர் பொதுமக்கள், இளைஞர்கள் செய்திருந்தனர்

## அலங்காநல்லூர் அருகே பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டம்



**அலங்காநல்லூர், ஜூன் 15-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள சிக்கந்தர்சாவடி பகுதியில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளர் கிட்டு தலைமை தாங்கினார். அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் முருகன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளர்களாக மாநில பொருளாளர் சையது மன்சூர் உசேன், மற்றும் தென் மாவட்ட பொறுப்பாளர் பாஸ்கரன், கலந்து கொண்டு கட்சியின் வளர்ச்சி மற்றும் வரும் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை நிர்வாகிகளுக்கு வழங்கினார். இந்த கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களை சமூக ஊடகங்களில் அவருக்கு எதிராக கருத்து பதிவு செய்பவர்களை கண்டிக்கிறோம்.

நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் பேச்சை மீறி செயல்படும் பாமக பொறுப்பாளர்கள் யாராக இருந்தாலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் கேட்கவில்லை என்றால் அவர்களை அடிப்படை உறுப்பினரிலிருந்து பதவி நீக்கம் செய்ய வேண்டும், அலங்காநல்லூரில் உள்ள சர்க்கரை ஆலை கடந்த பல ஆண்டுகளாக இயங்கவில்லை அவற்றை தாமதம் இன்றி உடனடியாக இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உசிலம்பட்டி மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவ பிரிவில் கவனக்குறைவாக மருத்துவம் நடைபெறுகிறது. இதில் அரசு முழு கவனம் செலுத்த வேண்டும். என பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் அலங்காநல்லூர் ஒன்றிய தலைவர் தீரன் பாஸ்கரன், முன்னாள் மாவட்ட தலைவர் எரம்பட்டி அழகுராஜா, மாவட்டத் துணைத் தலைவர் பிரபு, முடுவார்பட்டி ஊராட்சி கிளை செயலாளர் சுந்தர்ராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை மாநகராட்சி பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் தலைமையில் நடக்கிறது

**மதுரை, ஜூன் 15-**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கள் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கு வாரந்தோறும் வார்டு மறுவரையறை செய்யப்பட்ட ஐந்து மண்டலங்களுக்கு அந்தந்த மண்டல அலுவலகங்களில் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்று வருகிறது.

அதன்படி எதிர்வரும் 17-ம் தேதி மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) சர்வேயர் காலனி, அழகர்கோவில் மெயின் ரோடு, சம்பக்குளம் ரவுண்டானா அருகில் உள்ள கிழக்கு மண்டலம் அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற உள்ளது. இம்முகாமில் ஆணையாளர், துணை மேயர், மண்டலத் தலைவர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்கின்றனர். மண்டலம் 1 (கிழக்கு) உட்பட்ட வார்டு பகுதிகள் வருமாறு, ஆனையூர், பார்க்டவுண், நாகனாகுளம், அய்யர் பங்களா, திருப்பாலை, கண்ணனேந்தல், உத்தங்குடி, கற்பக நகர், பரசுராம்பட்டி, லூர்து நகர், ஆத்திக்குளம், கோ.புதூர், வள்ளுவர் காலனி, எஸ்.ஆலங்குளம், அலமேலு நகர், கூடல்நகர், மேலமடை, பாண்டிகோவில், சௌராஷ்ட்ராபுரம், தாசில்தார் நகர், வண்டியூர் ஆகிய வார்டுகள். இந்த குறைதீர்க்கும் முகாமில் பொதுமக்கள் குடிநீர், பாதாள சாக்கடை இணைப்பு, வீட்டு வரி பெயர் மாற்றம், புதிய சொத்து வரி விதிப்பு, கட்டிட வரைபட அனுமதி, தெருவிளக்கு, தொழில்வரி உள்ளிட்ட தங்கள் கோரிக்கை மனுக்களை கொடுத்து பயன் பெறுமாறு இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## ஒட்டன்சத்திரத்தில் கலைஞர் நூலகம் இன்று திறப்பு விழா

**ஒட்டன்சத்திரம், ஜூன் 15-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாராபுரம் சாலையில் இன்று மாலை 4 மணி அளவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ. பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தினை திறந்து வைக்கின்றனர். அதனைத் தொடர்ந்து இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நடைபெற உள்ளது.

## நத்தம் பகுதி விநாயகர் கோவில்களில் சங்கடஹர சதுர்த்தி விழா கோலாகலம்

**நத்தம், ஜூன் 15-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக் கேணி சுப்பிரமணியசுவாமி கோவில் அருகில் உள்ள விநாயகர் சன்னதியில் சங்கடஹர சதுர்த்தி விழா நடந்தது.

இதையொட்டி விநாயகப் பெருமானுக்கு அருகம் புல்,ரோஜா, மல்லிகை, உள்ளிட்ட பல பூமாலைகள் செலுத்தபட்டு சிறப்பு பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இதைப் போலவே கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் உள்ள விநாயகர், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள வலம்புரி விநாயகர் சன்னதி, பகவதி அம்மன் கோவிலில் உள்ள வெற்றி விநாயகர் சன்னதிகளிலும் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு விளக்கேற்றி தரிசனம் செய்தனர்.



● சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், துணை பொதுச்செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்து பேசினர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திருச்சி பயணம்

## கல்லணையில் நீரை திறந்து வைக்கிறார்

சென்னை, ஜூன் 15-

பாசனத்திற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று கல்லணை அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைக்க அவர் திருச்சி செல்கிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திருச்சி செல்கிறார். இன்று காலை 10.40 மணிக்கு முதல்வர் இல்லத்தில் இருந்து புறப்பட்டு 11 மணிக்கு சென்னை விமான நிலையம் சென்று பின்பு 11.15 மணி பயணிகள் விமானத்தில் பயணம் செய்து 12.25 மணிக்கு திருச்சி விமான நிலையம் சென்று பின்பு அங்கிருந்து 12.45 மணிக்கு சாலை மார்க்கமாக புறப்பட்டு 1.45 மணிக்கு கல்லணை கெஸ்ட் ஹவுஸ் சென்று தங்குகிறார், பின்பு கல்லணை கெஸ்ட் ஹவுஸில் இருந்து புறப்பட்டு கல்லணை அணையில் 6.00 மணிக்கு தண்ணீரை திறந்து வைக்கிறார்.

பிறகு 6.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் வந்து அங்கு கலைஞர் சிலையை திறந்து வைத்த பின் அங்கிருந்து புறப்பட்டு தஞ்சை சர்க்யூட் ஹவுஸ் சென்று இரவு தங்குகிறார்.

நாளை 16.06.2025 காலை அங்கிருந்து புறப்பட்டு 09.30 மணிக்கு மஹாராஜா மஹால் வந்து அங்கு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பின்பு அங்கிருந்து புறப்பட்டு 11.15 மணிக்கு ராஜா சரபோஜி அரசு கல்லூரி மைதானம் சென்று அங்கு மினி பஸ் போக்கு வரத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்த பின் 12.20 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு தஞ்சை சர்க்யூட் ஹவுஸ் சென்று தங்குகிறார்.

மாலை 16.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 5.30 மணிக்கு திருச்சி விமான நிலையம் வந்து 18.05 மணி பயணிகள் விமானத்தில் பயணம் செய்து 7.15 மணிக்கு சென்னை விமான நிலையம் வந்து பின்பு அங்கிருந்து புறப்பட்டு 7.45 மணிக்கு இல்லம் வருகிறார்.



● தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு சமூக வலைத்தள பயிற்சியளிக்கவும், சமூக வலைத்தளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும் மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். அதன்படி காஞ்சிபுரம் வடக்கு-தெற்கு மாவட்ட சமூக வலைத்தள துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் நடத்தினார்.




● சென்னை எழும்பூர் தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழும அலுவலக கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் 2025-2026-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் துறை சார்ந்த அலுவலர்கள், கட்டிட கலைஞர்கள் மற்றும் ஆலோசகர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச்செயலாளர் காகர்லா உஷா, முதன்மைச்செயல் அலுவலர் அ.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.




● சென்னையில் நேற்று தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை சார்பில் நீர்நிலைகள் புத்துயிர் பெறுவது மற்றும் நீர்த்தேவையில் தன்னிறைவு பெறுவதின் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு நடைபெற்ற நிலையான நீர்வள மேலாண்மைக்கான மக்கள் ஒருங்கிணைப்பு பயிலரங்கத்தில் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் தலைமைச்செயலாளர்கள், முதன்மைச்செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மடிக்கணினி வழங்கி, புதிய வீட்டிற்கு ஆணை:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பழங்குடியின மாணவி நன்றி

சென்னை, ஜூன் 15-

உயர்கல்விக்கு உதவிடும் வகையில் மடிக்கணினி வழங்கி, மேலும் வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆணையையும் வழங்கிய முதல்வருக்கு பழங்குடியின மாணவி ஆ.ராஜேஸ்வரி நன்றி தெரிவித்துள்ளார்.



முதல்வர், நான் ஐ.ஐ.டி.-ல் பயில தகுதி பெற்றுள்ளயொட்டி எனக்கு வாழ்த்து தெரிவித்து மேற்படிப்பிற்கான செலவுகளை அரசே ஏற்கும் என அறிவித்தார். அது மட்டுமல்லாமல், 12.6.2025 அன்று சேலத்திற்கு வருகை தந்த முதல்வர், என்னை நேரில் அழைத்து பாராட்டி, எனது உயர்கல்விக்கு உதவிடும் வகையில் மடிக்கணினியினை வழங்கியுள்ளார். மேலும் வீடு கட்டிக்கொடுப்பதற்கான ஆணையும் வழங்கியுள்ளார். நன்றாக பயின்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியில் சேர்ந்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பேன் என இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வர், தந்தை இல்லாத எனக்கு தந்தையாக எனது உயர் கல்விச் செலவை ஏற்பதும், வீடு வழங்கியுள்ளதும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. முதல்வருக்குஎனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### விமான விபத்தில் உயிரிழந்தவர்கள்

# குடும்பத்தினருக்கு கூடுதலாக 25 லட்சம் ரூபாய் நிவாரணம்

காந்தி நகர், ஜூன் 15-

விமான விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு கூடுதலாக ரூ.25 லட்சம் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் இருந்து 3 நாட்களுக்கு முன் மதியம் 1.39 மணியளவில் ஏர் இந்தியா விமானம் இங்கிலாந்தின் லண்டனுக்கு புறப்பட்டது. அந்த விமானத்தில் 230 பயணிகள் 10 பணியாளர்கள், 2 விமானிகள் என மொத்தம் 242 பேர் பயணித்தனர்.

புறப்பட்ட சில நிமிடங்களில் விமான நிலையத்தில் இருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மருத்துவ கல்லூரி மாணவர் விடுதி மீது விமானம் விழுந்து வெடித்து சிதறியது.



குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான விமானத்தின் வால் பகுதி நேற்று ராட்சத கிரேன் உதவியுடன் அகற்றப்பட்ட காட்சி.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்தனர். மருத்துவ கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர்கள் உள்பட 33 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் மொத்தம் 274 பேர் உயிரிழந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.1 கோடி நிவாரணம் வழங்கப்படும் என்று ஏர் இந்தியா நிறுவனம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்நிலையில், விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கூடுதலாக ரூ. 25 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்று ஏர் இந்தியா நிறுவனத்தின் தலைமை நிறுவனமான டாடா குழுமம் நேற்று அறிவித்துள்ளது. இதன் மூலம் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 1.25 கோடி நிவாரணம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசு முறை பயணமாக

# 3 நாடுகளுக்கு செல்கிறார் பிரதமர் மோடி

டெல்லி, ஜூன் 15-

அரசு முறை பயணமாக இன்று முதல் 3 நாடுகளுக்கு செல்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. வரும் 16-ம் தேதி கனடாவில் நடக்கும் ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

பிரதமர் மோடி அரசு முறை சுற்றுப்பயணமாக 3 நாடுகளுக்கு செல்கிறார். அவர் பயணத்தின் முதல் நாளாக இன்று டெல்லியில் இருந்து புறப்பட்டு மத்திய கிழக்கு நாடான சைப்ரஸ் செல்கிறார்.

இன்று சைப்ரஸ் செல்லும் பிரதமர் மோடி அந்நாட்டு தலைநகர் நிகோசியாவில் அந்நாட்டு ஜனாதிபதி கிறிஸ்டோடியுலசை சந்திக்கிறார்.

பின்னர், அந்நாட்டு தொழில் அதிபர்களையும் பிரதமர் மோடி சந்திக்கிறார்.

சைப்ரஸ் பயணத்தை முடித்துகொண்டு 16-ம் தேதி பிரதமர் மோடி கனடா செல்கிறார். கனடாவின் கனனாஸ்கிஸ் நகரில் நடைபெறும் ஜி7 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

ஜி7 மாநாட்டில் கலந்து கொண்டபின் 18ம் தேதி ஐரோப்பிய நாடான குரோஷியா செல்கிறார். அந்நாட்டி ஜனாதிபதி சோரன் மிலனொவ் மற்றும் பிரதமர் பென்கொவிக்கை பிரதமர் மோடி சந்திக்கிறார்.

இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

# தமிழ்நாட்டில் 76,181 மாணவர்கள்...

(1-ம் பக்க தொடர்ச்சி

நீட் தேர்வில் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களை பெற வேண்டும். அதன்படி 2024 ஆம் ஆண்டில், பொதுப் பிரிவு போட்டியாளர்களுக்கான தகுதி 50% ஆகவும், ஓபிசி, எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவுகளுக்கான தகுதி 40% ஆகவும் இருந்தது. பொது-பிடபிள்யூடி பிரிவைச் சேர்ந்த போட்டியாளர்கள் குறைந்த பட்சம் 45% மதிப்பெண்கள் பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் மருத்துவப் படிப்புகளில் சேருவதற்காக நடத்தப்பட்ட தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வான 'நீட்-யூஜி 2025' தேர்வை சுமார் 20 லட்சம் மாணவர்கள் எழுதினர். இந்தத் தேர்விற்கான தற்காலிக விடைக் குறிப்பை தேசிய தேர்வு முகமை கடந்த 3ம் தேதி வெளியிட்டது.

இந்நிலையில், நீட்-யூஜி 2025 தேர்வு முடிவுகளை தேசிய தேர்வு முகமை தற்போது இணையதளத்தில் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. நாடு முழுவதும் 22,09,318 மாணவர்கள் நீட் தேர்வு எழுதியதில், 12,36,531 மாணவர்கள் தகுதி மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

தமிழகத்தை பொறுத்தவரை, 1,35,715 மாணவர்கள் நீட் தேர்வு எழுதினர். இதில் 76,181 மாணவர்கள் தகுதி மதிப்பெண்களை பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் 26,580 மாணவர்கள் தமிழ் வழி கேள்வித்தாள் மூலமாக நீட் தேர்வு எழுதினர். தமிழகத்தில் நெல்லையை சேர்ந்த மாணவர் எஸ்.சூர்ய நாராயணன் 99.9987779 சதவீதம் பெற்று மதிப்பெண் தரவரிசையில் 27-வது இடம் பிடித்துள்ளார். இதேபோல், அபினீட் நாகராஜ் 99.9974653 சதவீதம் பெற்று 50-வது இடத்தையும், ஜி.எஸ். புகழேந்தி 99.9972390 சதவீதம் பெற்று 61-வது இடத்தையும், கே.எஸ்.ஹிருதிக் விஜயராஜா 99.9971484 சதவீதம் பெற்று 63-வது இடத்தையும், ஏ.ஜெ. ராகேஷ் 99.9964242 சதவீதத்துடன் 78-வது இடத்தையும், ஜி.பிரஜன் ஸ்ரீவாரி 99.9958811 சதவீதம் பெற்று 88-வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

இந்த வகையில், நீட் தேர்வு மதிப்பெண் பட்டியலில், முதல் 100 இடங்களில் தமிழகத்தைச் சேர்ந்த 6 பேர் இடம்பிடித்துள்ளனர்.



● மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட துவரிமான் ஊராட்சி கலிங்கமடை அய்யனார் கோவில் அருகில் மாடக்குளம் வாய்க்காலை கடக்க கட்டப்பட்ட பாலத்தினை நேற்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். அருகில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பரவைராஜா, கு.திரவியம், வி.பி.ஆர். செல்வகுமார், மாவட்ட கவுன்சிலர் சத்யமீனாட்சி ஜெயக்குார், மார்க்கெட் மார்நாடு, பி.கே.எம்.மாரிமுத்து, மதன் உள்ளனர்.